பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 20 | வெள்ளிக்கிழமை (04.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 197

## அநுராதபுரம் சாளியபுரத்தில் உள்ள

# ஆயுதக் களஞ்சியத்தில்

# நேற்று திடீர் தீ விபத்து

## சதியா? விதியா? விசாரணை நடக்கிறது

(நமது நிருபர்)

**அநுராதபுரம் சாளியபுரத்தில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் திடீரென ஏற்பட்ட பாரிய தீவிபத்தினால் ஆயுதக் களஞ்சியம் பற்றி எரிவதாகவும் இடை இடையே வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணரத்னா தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரம் சாளியபுரம் இராணுவ முகாமின் கஜபாகு படைப் பிரிவின் ஆயுதக் களஞ்சியத்தில் நேற்று மாலை 5மணியளவில் திடீரென பாரிய தீ பரவியதால் இராணுவ முகாமில் இருந்த ஆயுத தளபாடங்கள், வெடி மருந்துகள், குண்டுகள் என்பன இடைஇடையே வெடித்துச் சிதறிய வண்ணம் இருந்தன.

இராணுவ முகாமில் கொழுந்து விட்டெரியும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தீயணைப்புப் படையினர் பெருமுயற்சி செய்து வருகின்றனர்.

இராணுவ முகாமில் ஏற்பட்ட தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டதா? அல்லது சதி முயற்சியா என்பதைக் கண்டறிவதில் இராணுவத்தினர் தீவிர

(10ம் பக்கம் பார்க்க)



## தமிழ்ச்செல்வனுடன் கனடிய தூதர் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலரிறேமன் அம்மையார் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் இடை நிறுத்தி வைக்கப் பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்தும்,சமஷ்டித் தீர்வு விடயங்கள் குறித்தும்,டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதியைப் பயன்படுத்தும் ஒழுங்கு முறை குறித்தும் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் உறுதியான நிலைப்பாட்டை அரசியல் துறைப் பொறுப்பாளர் கனேடியத் தூதருக்கு தெளிவாக எடுத்துக் கூறினார். (இ)

## மட்டு.ஈ.பி.டி.பி.அலுவலகம் மீது நேற்று கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் உள்ள ஈ.பி.டி.பி மாவட்ட அலுவலகம் மீது நேற்றுக் காலை 6.30 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

அலுவலகத்தின் முகப்பில் இக் குண்டு விழுந்து வெடித்துள்ளதால் பலத்த சேதம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இக் குண்டை வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகம் எங்கும் நாளை கரும்புலிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவு நாள் எழுச்சி நிகழ்வுகள்,நாளை தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் எழுச்சி நிகழ்வுகள் காலை 9மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும்.

வடமராட்சி தென்மராட்சிக் கோட்டங்கள் இணைந்து,கரும்புலித் காக்குதல் முதன் முதல் இடம் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எழுச்சி நிகழ்வுகளை நடாத்தவுள்ளன.வலிகாமம் கோட்ட நிகழ்வுகள் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதான அரங்கிலும், நல்லூர்க் கோட்ட நிகழ்வுகள் கொக்குவில் நாச்சிமார் கோயிலுக்கு அருகாமையிலும்,நெடுந்தீவில், நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்திலும்,வேலணையில் துறையூர் சனசமுக நிலைய முன்றலிலும் எழுச்சி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கரும்புலிகள் நாள் ஏற்பாட்டுக் குழுவினர் மேற் கொண்டு வருகின்றனர்.

மாலை நிகழ்வுகள் கோட்ட ரீதியான பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் மாலை 7.05மணிக்கு ஆரம்பமாகி பொதுக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இதேவேளை வன்னிப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடை பெறுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி. கூட்டு முக்கிய பேச்சு நாளை

### ஜனாதிபதி மாளிகையில் இடம் பெறும்

(கொழும்பு)

கூட்டு முன்னணி அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையியே நாளை சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் மற்றுமொரு பேச்சு வார்த்தை இடம் பெறவுள்ளது.

கூட்டணி அமைப்பதில் எதிர் நோக்கியுள்ள சிக்கல்கள் தொடர்பாக இரு தரப்பும் சில இணக்கப் பாடுகளைக் கண்டு கொள்ளும் பொருட்டே இக கூட்டத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கூட்டத்தில் காணப்படும் இணக்கப்பாடுகளின் அடிப்படையில் எதிர்வரும் 15-ம் திகதி கண்டி தலதா மாளியையில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.இக் கூட்டு முன்னணியின் தலைவியாக ஜனாதிபதி இருப்பார்.

இதேவேளை,அமையவுள்ள கூட்டு முன்னணியின் பதவிப் பங்கீடு தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நிமால்பால டிசில்வாவுக்கும்,ஜே.வி.பிக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதனால் இவருக்குப் பதிலாக அனுரா பண்டார நாயக்காவே பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளார்.

கூட்டு முன்னணியின் உடன்படிக்கை 46 பக்கங்களை கொண்டமைந்துள்ளது. (த)

## கடற்படையின் டோறாப்படகு மீனவரின் படகை மோதியது

### வல்வெட்டித்துறைக் கடலில் சம்பவம்

(திருநெல்வேலி)

வல்வெட்டித்துறைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் படகின் மீது கடற்படையின் டோறாப் படகு மோதியதில் மீனவப் படகு முற்றாகச் சேதமடைந்தது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3 .மணிளவில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

நேற்று முன்தினமிரவு கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் தொழிலில ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அதிகாலை 3 மணியளவில் அப்பகுதிக்கு வந்த கடற்படையின் டோறாப்படகு மீனவர்களின் படகொன்றுடன் மோதி அதனை முற்றாகச் சேதமடையச் செய்துள்ளது.

அதனையடுத்து அப்படகிலிருந்த மூன்று மீனவர்களையும் தமதுபடகில்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### இடம்பெயர்ந்துள்ள

# இந்திய வம்சாவளி மக்களுக்காக

# மாதிரிக்கிராமங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்தம் காரணமாக கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கென கிளிநொச்சியில் மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படுகின்றன.

''நிக்கொட்'' நிறுவனத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்படுகின்ற இந்த மாதிரிக் கிராமங்களில், முதலாவதாக கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமைக்கப்படவுள்ளது.

வவுனியா நெளுக்குளம் நலன்புரி நிலையத்தில் தஞ்சமடைந்திருந்த இந்திய வம்சாவளி மலையக மக்களில் 250குடும்பங்கள் தற்போது பாரதிபுரத்தில் மீளக்குடியேறியுள்ளன.

இவர்களுக்கு தலா 2ஏக்கர் காணியும், மீள்குடியேற்ற கொடுப்பனவாக 25ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 'நிக்கொட்' நிறுவனம் மாதிரிக் கிராமம் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குரிய முன்னேற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

1983ஆம் ஆண்டுகளின் பின்னர் மலையகத்திலிருந்து கிளிநொச்சியில் குடியேறிய மக்களில் சொந்த காணிகளற்று எனையோரின் காணிகளில் குடியிருந்தவர்களுக்கே தற்போது சொந்த காணிகள் வழங்கப்படுகின்றன.

பாரதிபுரம் தவிர, எனைய தொண்டமான் நகர், மலையகபுரம், கிருஷ்ணபுரமகிழக்கு, உதயபுரம் மேற்கு, விநாயகபுரம் போன்ற கிராமங்களிலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன.

கிளிநொச்சியில் இதுவரை இந்திய வம்சாவளியினர் சுமார் 6000பேர் இருப்பதாக அரசஅதிபர் செயலகம் அறிவித்துள்ளது. அத்துடன் இடம் பெயர்ந்து சென்றுள்ள அனைத்து மலையக இந்திய வம்சாவளியினருக்கும் காணிகள் வழங்கப்பட்டு அவர்கள் மீளக்குடியேற்றப்படுவர் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாரதிபுரம் அருகே, அமைச்சர் பெ.சந்திரசேகரனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கலாசார மண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இது போன்று சகல வசதிகளுடனும் சகல மாதிரிக் கிராமங்களும் அமைக்கப்படும் என அரச அலுவலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.(பி-15)

### போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து

## வெளிநாடு சென்ற பதில் அதிபர்கள் மீது கல்வி அமைச்சு கடும் நடவடிக்கை

(கொழும்பு)

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட பிரதி மற்றும் பதில் அதிபர்கள் மீது கல்வி அமைச்சு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

தொழில் அபிவிருத்தித்திட்டதின் அடிப்படையில் அதிபர்களின் பயிற்சிகளுக்கென ஒதுக்கப்பட்ட வெளிநாட்டு விஜயங்களின் போது, பதில் மற்றும் பிரதி அதிபர்கள் போலி ஆவணங்களை சமர்பித்து கடந்த காலங்களில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர் எனவும் இவர்கள் இஸ்ரேல், கனடா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் தற்போது பயிற்சி பெற்று வருகினறனர் எனவும் தெரியவந்துள்ளது.

பாடசாலைகளின் அதிபர்கள் எனக் கூறிக்கொண்டு மேற்படி பிரதி மற்றும் பதில் அதிபர்கள் மேற்கொணடுள்ள இக்குற்றச் செயலுக்காக கடும நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், இவர்களின் பிரயாணச் செலவுகளுக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட நிதி இவர்களிடம் இருந்து அறவிடப்படும் எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி தேரும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, உயர்பாதுகாப்பு வலயத்தில் மேற்படி ஆலயம் அமைந்திருப்பதால் பக்தர்கள் தெல்லிப்பழைச் சோதனைச்சாவடியூடாக சோதிக்கப்பட்ட பின்னர் யாழ். செயலகத்தால் ஒழுங்கு செய்யப் பட்ட இரு பஸ்களின் மூலம் கோயிலுக்குச் செல்லமுடியும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

### பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கான யௌவனப் பராய இனப்பெருக்க சுகாதாரக் கல்வி பற்றிய பயிற்சிப் பட்டறை இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இதில் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் நிதி உதவியுடன் அமுல் படுத்தப்படும் இந்தப் பயிற்சிப் பட்டறையானது தொடர்ந்தும் ஏனைய மாணவர்களுக்கும் விஸ்தரிக்கப் படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்றைய பயிற்சிப் பட்டறையில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்குமாறு கலைப்பீடாதிபதி கேட்டுள்ளளார். (உ)

### மென்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப்பட்டுவரும் போட்டிகளின் தொடராக நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முத்துத்தம்பி வித்தியாலயத்தில் மென்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது. (உ-15)

### மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)


மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை விழா கோப்பாய் சைவ நற்சிந்தனைக்கழகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3மணிக்கு த. தர்மராஜா தலைமையில் கோப்பாய் வட கோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் நா.சண்முகரத்தினமும் சிறப்பு விருந்தினராக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆசிரியர் ஆ.சிவநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதேவேளை,கோப்பாய் வட கோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய தருமபரிபாலன சபை செயலாளர் ஐ.சிவலோகநாதன் வாழ்த்துரையையும், ஆலயக் குருக்கள் பிரமஸ்ரீபூரணகீதச் சந்திர குருக்கள் ஆசியுரையையும் வழங்கவுளளார். (உ-15)

## 45ம் நாள் நினைவலைகள்

பிறப்பு 17 ✡ 11 ✡ 1954



இறப்பு 20 ✡ 05 ✡ 2003

**பொன்னுத்துரை சிதம்பரநாதன்**

**(வோச் மோகன்)**

மறக்க முடியாத உறவே உன் மாசற்ற மதிமுகம்
மனதை விட்டு மறையாதுடா
மண்ணை விட்டு நீ சொல்லாமல்
சென்றது ஏன் என் மகனே!
ஒன்பது பேர் ஒன்றாய் குலவி அண்ணா தம்பி என
உன்னை ஆசையுடன் அழைப்பதெப்போ
எம் உடன் பிறப்பே!
காலமெலாம் உற்றதுணை என்றிருந்தேன்
பாதியிலே சென்றதேனோ பாசமிகு அப்பாவே
பாரினில் நாமிருவர் பார்ப்பதெப்போ?
உம்முகத்தை உறவால் மைத்துனன் ஆகி
உள்ளத்தால் உற்றசகோதரனாய்
வாழ்ந்தவனே பிரியமான மாமாவே
ஆசை சித்தப்பாவே நீர்
மண்ணுலகை உதறி விட்டு விண்ணுலகு ஏகியதேன்
கண்ணீரோடு விடைதேடி காத்திருக்கிறோம்
வாராயோ ஒரு முறை!
இவ் உறவுகளுக்காய்

*393/34 கோவில் வீதி,*
*நல்லூர்* (7220) *குடும்பத்தினர்.*

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

### இன்று ஐந்தாம் திருவிழா



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### சிலையென்று யார் சொல்லுவார்!

*நாக மணிப்புலவர் நாடறியும் பாவலர்கள்*
*தாகர் தணித்த தமிழ்மண்ணில் – வேகமுடன்*
*அலைவந்து கால்கழுவும் அம்மையே உன் வடிவை*
*சிலையென்று யார்சொல்லு வார்*

*பட்டுடுத்தி வீதிவரும் பால்நிலா போன்றமுகர்*
*பட்டுத் தெறிக்குமெந்தன் பார்வையிலே – கிட்டவந்து*
*உன்னழகை கண்டு உவக்கின்ற வேளையிலே*
*என்னையுஞ்சற் றேதிரும்பிப் பார்*

*காலைக் கதிரோன் கண்விழித்துன் காலடியில்*
*வேலை தொடங்கும் விதமறிவேன் – சீலமுடன்*
*வந்தார்க் கமுதளிக்கும் வடிவாம்பிகைத் தாயே*
*நொந்தார்க்கு நீயே துணை*

*நயினைப் பதியுறையும் நாகபூஷணி அம்மா*
*கயலைப் பழித்த விழியாளே – சுயலாபம்*
*கருதா துனது கவின்கண்டு நான் மகிழ்வேன்*
*திருவாய் மலர்வாய் எனின்*

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா

### பூ வடி வாழியவே

அலைகடல் நடுவில் உறைமாதே
கலைகளின் தாயே கற்பகமே
தலை குனிவின்றித் தமிழ் வாழ
மலையென வருமிடர்களைவாயே

நயினைப் பதிவாழ் நாயகியே
நல்லவர் வாழச் செய்வாயே
தொல்லைகள் எல்லாம் போயகல
எல்லைகள் வகுப்பாய எம் தாயே

காலின் சலங்கை சதிராட
காவடி யாட்டம் துதிபாட
பாவடிவாகப போற்றுகின்றோம்
பூ வடி வாழிய வாழியவே

மட்டுவில் கே.வி.சாமந்தி

### நயினையுறை நாயகியே

நயினையுறை நாயகியே அம்மா
அன்னையே நாக பூசணியே
எங்களை ஆண்டருள் புரிபவளே!
அலைகடல் நடுவே வீற்றிருந்து
வேண்டுபவர்க்கு வரம் அளிப்பாயே!
நிலை பெறுசக்தி அமபாளே!
அடியார் குறைதீர் அம்மா தாயே!
ஆண்டருள்வாய் எமை அன்பாலே!
உந்தன் திருவடியை நிதம் நிதம்!
வணங்குகின்றேன் அம்மா தாயே!
ஏற்றம் பெற நல்ல வரமருள்வாய் தாயே!

அம்பிகையடியான், கைதடியூர் - கண்ணன்

### ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு

கலாநிதி எஸ்.சிவலிங்கராசா

*(தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்)*

# தமிழ் நாட்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 4 ஆயிரம் அரச ஊழியர்கள் பொலிஸாரால் கைது

## 'எஸ்மா' சட்டத்தைப் பிரயோகித்து ஜெயலலிதா கடும் நடவடிக்கை

(சென்னை)

**தமிழ் நாட்டில் ஓய்வூதியம் கோரி வேலைநிறுத்தம் செய்துவரும் அரச ஊழியர்கள், ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர் சங்கங்களின் முக்கியத் தலைவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டுள்ளவர்களில் அடங்குவர்.

ஓய்வூதியம் கோரியும், முன்னர் வழங்கப்பட்டு வாபஸ் பெறப்பட்ட ஓய்வூதியத்தை மீண்டும் வழங்கும் படி கோரியும் தமிழ் நாட்டில் அரச ஊழியர்கள் அரச பாடசாலை ஆசிரியர்கள் 12 லட்சம் பேர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள் மீது எஸ்மா என்றழைக்கப்படும் அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் படி தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இதன்படி தமிழ் நாடு முழுவதும் இதுவரை 40 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

தங்களது நியாயமான கோரிக்கைகள் வழங்கப்படும் வரை வேலை நிறுத்தத்தைக் கைவிடப் போவதில்லை என்று ஊழியர்சங்கங்கள் அறிவித்துள்ளன.

வேலை நிறுத்தம் காரணமாக அரசாங்க திணைக்கள அலுவலகங்கள் பெரும்பாலும் வெறிச்சோடிக் கிடந்ததாகவும், அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பணிக்கு வந்திருக்கவில்லை என்றும் செய்திகள் கூறின. 'எஸ்மா' சட்டத்தின் கீழ் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் இடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அதிகாரிகள் கூறினார்கள்.

அதேவேளை, அரச ஊழியர்களின் கோரிக்கைகளை நீதியான முறையில் தீர்த்து வைக்கும் படியும கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படியும் தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரச ஊழியர்களின் சங்கத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தும்படியும் எதிர்க்கட்சியினர் கோரியுள்ளனர். (பி-2)

## பயங்கரவாதம் தொடர்பாக முஷாரப் செயற்பாட்டுக்கு அதிபர் புஷ் பாராட்டு

(வாஷிங்டன்)

பயங்கரவாதச் செயல்களை ஒடுக்க பாகிஸ்தான் அதிபர் முஷாரப் எடுத்துவரும் நடவடிக்கைகளை அமெரிக்க அதிபர் புஷ் பாராட்டியுள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதச் செயல்களை பாகிஸ்தான் நிறுத்தவில்லை என்று இந்தியா புகார் கூறி வருகின்ற போதிலும் அதைக் கண்டுகொள்ளாமல் முஷாரப்பை புஷ் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இருவரும் எடுத்துவரும் நடவடிக்கைகள் காரணமாக எல்லையில் பதற்றம் தணிந்துள்ளதாகவும் புஷ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தானிடையே பதற்றம் தணிந்து சமரச முயற்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

பாகிஸ்தானுக்கான புதிய தூதரை இந்தியா அறிவித்துள்ளது. இந்தியாவிற்கான பாகிஸ்தான் தூதராக அஜீஸ் அகமது கான் அறிவிக்கப்பட்டு அவர் புதுடில்லி வந்து சேர்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது என்று புஷ் கூறியதாக வெளியுறவுத்துறை அதிகாரி அரி பிளெட்சர் தெரிவித்தார். (பி)

## காஷ்மீரில் புதிய குகைக்கோயில்

(ஜம்மு)

அமர்நாத் கோயிலைப் போல காஷ்மீரின் தென்பகுதியில் புதிய குகைக் கோயில் கட்டப்பட்டு வருகின்றது.

சந்தன் வாரி மலைப் பகுதியில் இது அமைகிறது. பணிகள் பூர்த்தியாகி இந்த ஆண்டே தரிசனத்திற்கு மக்கள் அனுமதிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பாறைகளும், தேவதாரு மரங்களும் சூழ்ந்த ரம்மியமான சூழ்நிலையில் இந்தக் குகைக் கோயில அமைந்திருக்கிறது. இதில் கருப்புப் பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்ட 2 அடி உயர சிவன் சிலை உள்ளது. அருகே சிறிதும், பெரிதுமாக 10க்கும் மேற்பட்ட சிவலிங்கங்கள் இருக்கின்றன.

இக்கோயிலுக்கு நடைபாதை அமைக்கும் பணி வேகமாக நடந்து வருகின்றது. இந்தக் குகைக் கோயிலில் வேறு இரு குகைகளும் உள்ளன.(பி)

## ஈரானின் அணுவாயுதப் பிரச்சினையால் ஜப்பானின் எண்ணெய் களஞ்சிய திட்டம் கைவிடப்படலாம்

(டோக்கியோ)

ஈரானில் பாரிய எண்ணெய் களஞ்சியமொன்றை அமைப்பது தொடர்பான உடன்படிக்கை குறித்து தீர்மானம் எடுக்கும் போது அந்நாட்டின் அணுவாயுத விவகாரம் குறித்து தீவிர கவனம் செலுத்தப்படும் என ஜப்பான் வெளிவிவகார அமைச்சகம் கூறியுள்ளது.

ஈரானில் பாரிய எண்ணெய்க் களஞ்சியமொன்றை அமைக்கப் போவதாக சில தினங்களுக்கு முன்னர் அறிவிப்பொன்றை விடுத்திருந்த ஜப்பான் வெளிவிவகார அமைச்சகம் இது தொடர்பாக நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பகிரங்கமாக பேசுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளது.

இதனையடுத்து இந்த அமைச்சகத்துடன் பேசிய ஜப்பான் பிரதமர் 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்த உடன்படிக்கை விடயத்தை கவனத்தில் கொள்ளும் போது ஜப்பானினதும் ஈரானினதும் தற்போதைய நிலைமையை நன்கு அவதானித்து செயற்படுமாறு கூறியுள்ளார்.

அதேசமயம் ஜப்பானின் இவ் உடன்படிக்கைத் திட்டத்தை கைவிடுமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஈரானின் அணுவாயுத சோதனைகளை மேற்கொள்ள சர்வதேச அணுசக்தி நிபுணர்களை அங்கு அனுமதிக்க அந்நாடு மறுப்புத் தெரிவித்து வருவதையடுத்தே அமெரிக்கா ஜப்பானை இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இதன் காரணமாக எண்ணெய்க் களஞ்சியத்தை ஈரானில் அமைக்கும் விடயத்தில் ஜப்பான் தடுமாற்ற நிலைக்குள்ளாகியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (பி-2)

## லைபீரியாவின் இன்றைய நிலைக்கு ஜனாதிபதி ரெய்லரே காரணம் ராஜதந்திரிகள் குற்றச்சாட்டு

(மன்ரோரியா)

லைபீரியாவின் தற்போதைய மிக மோசமான நிலைமைக்கு ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லரே காரணம் என்று ராஜதந்திரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

1999ஆம் ஆண்டிலிருந்து மேற்காபிரிக்காவில் பல சிவில் யுத்தங்கள் இடம்பெறுவதற்கு காரணமாக இருந்த சாள்ஸ் ரெய்லர் சர்வதேச நீதிமன்றத்திலும் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

அயல் நாடான லைபீரியா அவருக்கு அரசியல் புகலிடம் அளிக்க முன்வந்துள்ள போதிலும் ஜனாதிபதி ரெய்லர் அதனை நிராகரித்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தில் தாம் நிறுத்தப்படமாட்டார் என்ற வகையில் உத்தரவாதம் ஒன்று பெற்றுக் கொள்வது அவரது நோக்கமாகும். (பி-9)

உலக தரிசனம்

## பெத்தலகேமின் பாதுகாப்பை பலஸ்தீனப் பொலிஸ்படை பொறுப்பேற்றது

## இஸ்ரேலியர் வெளியேற்றத்திற்கு ஜோர்ஜ் புஷ் பாராட்டு

(ஜெருசலேம்)

**இஸ்ரேலிய துருப்புக்கள் மேற்குக் கரை பெத்லகேம் நகரிலிருந்து வெளியேறி நகரின் கட்டுப்பாட்டை பலஸ்தீனப் பாதுகாப்புப் படைகளிடம் கையளித்ததைத் தொடர்ந்து அங்கு பலஸ்தீனர்கள் பெரும் கொண்டாட்டங்களில் இறங்கினர்.**

பெத்லகேமின் பழைய தேவாலயங்களின் மணிகள் ஒலிக்கத் தொடங்கின. நகருக்குள் பலஸ்தீனப் படையினர் அணிவகுத்து நுழைந்தனர். அவர்களை மக்கள் ஆரவாரத்தோடு வரவேற்று ஆர்ப்பரித்தனர்.

நீல நிற சீருடை அணிந்த பலஸ்தீனப் பொலிஸார் ரைபிள்கள், கைத்துப்பாக்கிகளுடன் வீதிச் சந்திகளில் நிலைகொள்ளத் தொடங்கினர். போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டனர். சிலர் பலஸ்தீனக் கொடிகளை அசைத்தபடி போக்குவரத்துப் பணிகளை மேற்கொண்டனர்.

**தொலைபேசியில் புஷ் பாராட்டு**

இஸ்ரேலியர் வெளியேறியிருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனை தொலைபேசியில் அழைத்து பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார். இதுபற்றி வெள்ளை மாளிகைப் பேச்சாளர் மைக்கல் அன்ரன் கூறுகையில்,

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுருக்கும் பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாசுக்கும் இடையில் கடந்த செவ்வாயன்று நடந்த பேச்சுக்களையடுத்து இந்தப் பாதுகாப்பு கைமாறல் இடம்பெற்றுள்ளது. 'றோட் மாப்' (வழித்தடவரைபடம்) என்றழைக்கப்படும் அமெரிக்காவின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச அமைதி உடன்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுப்பதெனவும் இந்த சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டின்படி வெளியேறிச் செல்லும் இஸ்ரேலியப் படைகளிடமிருந்து பாதுகாப்பை பலஸ்தீனப் பொலிஸார் கையேற்க வேண்டும். அதேசமயம் இஸ்ரேலியருக்கு எதிராக எதுவித தீவிரவாதத் தாக்குதல்களும் நடைபெறாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். இஸ்ரேலிய தாக்குதலுக்குள்ளாகி நாசமாக்கப்பட்ட மேற்குக்கரைப்பகுதியையும் காஸாப் பகுதியையும் மறுசீரமைப்பதற்கென பலஸ்தீன அதிகாரிகளுக்கு 30 மில்லியன் டொலர் வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

பெத்லகேமிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறினாலும் அவர்களின் ஆக்கிரமிப்பு முற்றாகிவிட்டது என்று கூற முடியாது. பெத்லகேமிற்குள் போவதும் வெளியேறுவதும் தொடர்ந்து இஸ்ரேலியர் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். நகருக்கு வெளியில் அவர்கள் இருந்து வருகிறார்கள்.

அமைதி முயற்சியில் சர்வதேச கவனம் இருந்து வருவதால் இப்போது முன்னெடுக்கப்படும் அமைதித் திட்டம் நிறைவேற்றப்படுவது சாத்தியமாகலாம் என பெத்லகேம் மேயர் ஹன்னாநாஸர் கருத்துக் கூறினார். இஸ்ரேலிய வெளியேற்றம் வெறும் சம்பிரதாயம் தான். நகரில் பெரிதாக ஒன்றும் மாறிவிடவில்லை. சீருடை படையினரின் மாற்றத்தை தவிர என்றார் மேயர். (பி)

## தாய்லாந்து மியான்மார் எல்லையில் முகாம் அமைக்க ஐ.நா. அனுமதி

(பாங்கொங்)

மியான்மரில் இருந்து அகதிகளாக வருபவர்களுக்கு தாய்லாந்து-மியான்மர் எல்லைப் பகுதியில் முகாம் ஒன்றை அமைக்க ஐக்கிய நாடுகள் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய ஒரே நேரத்தில் ஆயிரத்து 500 பேர் தங்கக்கூடிய வகையில் இந்த அகதி முகாம் அமைக்கப்படவுள்ளது.

மியான்மரில் நிலவும் இராணுவ ஆட்சியிலிருந்து தப்பி அரசியல் தஞ்சம் கோரி தாய்லாந்துக்கு வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அடுத்தே இந்த முகாம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பி-9)

## அமெரிக்காவில் ஒளிந்திருந்த முன்னாள் 'நாஸி' முகாம் காவலாளி பிடிபட்டார்

### நாடு கடத்த அதிகாரிகள் திட்டம்

(நியூயோர்க்)

நாஸிகளின் வதை முகாம் காவலராக பணி புரிந்தவர் என்று கருதப்படும் ஒரு நபரை நாடு கடத்துவது பற்றி அமெரிக்க அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

ஜோகான் லெப்ரிச் என்ற 77 வயதான பிரஸ்தாப நபர் மிச்சிகனில் கிளின்ரன் நகரிலுள்ள தனது வீட்டின் படிக்கட்டுக்களின் கீழே ஒளித்துக் கொண்டிருக்கும் போது குடிவரவு திணைக்கள ஊழியர்களால் இவர் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க சட்டமா அதிபர் ஜோன் அஷ்குரொப்ட் தெரிவித்துள்ளார்.

1987ல் இவரது குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டதன் பின் சட்டவிரோதமாக இவர் அமெரிக்காவில் தங்கியிருந்துள்ளார். ஆஸ்ட்ரியாவில் 1943-1944 ஆண்டுகளில் நாஸிகள் ஆக்கிரமித்திருந்த போது மிகவும் மோசமான விமர்சனத்திற்குள்ளாகியிருந்த மவுத்தோசன் வதை முகாமுக்கு லெப்ரிச் காவலராக இருந்துள்ளார் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

ரொமேனியாவில் பிறந்த லெப்ரிச் 1952ல் அமெரிக்காவுக்கு வந்து குடியுரிமை பெற்றுள்ளார். குடியுரிமை பறிக்கப்பட்டதை அடுத்து அவரது வழக்கறிஞர்கள் அவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகக் கூறியிருந்தனர்.

இப்பொழுது அவரை நாடு கடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (பி)

## இன்று ஒரு தகவல்

# பட்டினி பயன் தரும்

சேர் சாப்பிடாமல் இருந்து பாருங்கள் அதனாலே கிடைக்கிற சௌகரியம் நிறைய இருக்கிறது. எமக்குத் தெரிந்தும் தெரியாமலும் எங்கள் உடம்புக்குள்ளே எவ்வளவோ கோளாறுகள் இருக்கலாம்.

எல்லாவற்றையும் செலவு இல்லாமல் பார்க்கிறதிற்கு ஒரு வழி சாப்பிடமால் இருக்கிறது தான்.

உடம்பிலே உண்டாகக்கூடிய நோய், சுகக்குறைவு இதையெல்லாம் இயற்கையாகவே ஜீவ அணுக்கள் சரி செய்து விடுமாம்.

உண்ணாநோன்பென்பது உடற்கூறு ரீதியான ஓய்வொன்று சொல்கிறார்கள். இது நோயயைக் குணப்படுத்தும். அது மட்டுமல்ல நோய் வரவிடாமலும் தடுக்குது. சாப்பிடாமல் இருந்துதான் பிரார்த்தனை, தியானம் எல்லாம் பண்ணுவார்கள். இது வேறும் தெய்வீகம் மட்டுமல்ல, விஞ்ஞானம் கலந்த தெய்வீகம். சாப்பிட்டு விட்டு தியானம் பண்ணுறேன், பிரார்த்தனை பண்ணுறேன் என்று ஆரம்பித்தால் உங்களுக்கு தெய்வீக சிந்தனை வராது தூக்கம் தான் வரும்.

தூங்கி முழிப்பீர்கள். மறுபடியும் சாப்பிடலாம் என நினைப்பீர்கள். எனவே உடலிலே உள்ள கழிவுப்பொருள் கழிவதற்கு பட்டினி அவசியம். இயற்கை வைத்தியத்திலே உண்ணாநோன்பு ஒரு முக்கியமான சிகிச்சை.

நோயுடைய தன்மையைப் பொறுத்துத்தான் உண்ணாநோன்பு எப்பொழுது இருக்கவேண்டும், எப்படி இருக்கவேண்டும் என்பது கவனிக்கப்படும்.

நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கள். எல்லாம் வீபரமாகச் சொல்லுகிறேன். முதலிலே குளிர் காலத்திலே நோன்பு வேண்டாம். உடம்பிலே உசார் இல்லை என்றால் வேண்டாம்.

நரம்புத் தளர்ச்சி, பயந்த சுபாவம், கோபதாபம் உள்ளவர்கள் பட்டினிநோன்பைப் பிடிக்கக்கூடாது. புதிதாக உண்ணாவிரத நோன்பு பிடிக்கத் தொடங்குபவர்கள். சில வரைமுறைகளை வைத்துக்கொள்ளுங்கள். முதலிலே காலை உணவை மட்டும் நிறுத்துங்கள். பின் காலையுடன் மதியத்தையுமநிறுத்துங்கள். பதிலுக்குப்பழச் சாற்றை குடியுங்கள். நாள்போக மூன்று வேளையும் சாப்பிடாது விட்டு, நீராகாரம் மட்டும் அருந்துங்கள். உண்ணாநோன்பு இருக்கும்பொழுது எந்தவித அதிர்ச்சிக்கும் ஆளாகக்கூடாது. அமைதியான சூழ்நிலை வேண்டும். நல்ல சுற்றாடல் வேண்டும். ஈரமான உடையோ, வெதுவெதுபபான உடையோ அணியக் கூடாது சுத்தமான குடிநீர் பருகவேண்டும். உண்ணாவிரதத்துக்கு முன்பு ஒரு வாரமோ பின்பு ஒரு வாரமோ கெட்டபழக்கங்களில் ஈடுபடக்கூடாது.

உண்ணாவிரதத்தை முடிக்கிறபோது பழச்சாறு அல்லது இளநீர் குடித்து நிறைவு செய்யவேண்டும். நீங்கள் உண்ணாவிரதம் இருக்கிறபொழுது தலை சுற்றல், தலை வலி, பலவீனம், இத்யப்பட படப்பு, நாக்கில் மா படிவு, ருசி இல்லாமை இதுபோல் அறிகுறிகள் இருக்கலாம் நீங்கள் அச்சப்படாது இருக்கவேண்டும்.

இயற்கை வைத்தியம் என்ன சொல்லுகிறது என்றால் உண்ணாவிரத காலத்தில் உடம்பிலே நஞ்சுக்கழிவுகள் எல்லாம் வெளியேறும்.

உடல் பருமனைக் குறைக்கிறதற்கு உண்ணாவிரதமும் உணவுக்கட்டுப்பாடும் ஒரு நல்ல வழி. இடையிடை விரதமிருந்தால், உடலுக்கு நல்ல உற்சாகம் ஏற்படும். உண்ணாவிரதத்தால் மனநோயும் மாறுமாம். போதைப் பொருள், புகையிலை பிடித்தல் போன்ற பழக்கங்களைத் தவிர்க்க இது உதவுமாம்.

இதனால் எடை குறையுது. தோற்றப்பொலிவு ஏற்படுகிறது. உற்சாகம் வருகிறது. புத்துணர்ச்சிகிடைக்கிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அமெரிக்க அதிகாரிகள் குழு தரை வழியால் யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று எதிர் வரும் ஆறாம்திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க பிரதித்தூதுவர் டொனால்காம் தலைமையிலான இக்குழுவில் அரசியல் பிரிவு அதிகாரி கிறிஸ் லோஸ், பொது மக்கள் தொடர்பு அதிகாரி பத்மினி ராஜதுரை, அரசியல் ஆய்வாளர் மாயா வெஸ்லர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

மேலும், இக் குழுவினர் 3 தினங்கள் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து யாழ். ஆயர், யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட பல முக்கிய பிரமுகர்களை சந்திக்கவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதுவரை காலமும் விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சென்ற அமெரிக்க அதிகாரிகள் இம் முறை ஏ-9 வீதியூடாக வாகனத்தில் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# கிண்ணியா புலிகள் முகாம்குறித்த கண்காணிப்பு குழுவின் கருத்து

(கொழும்பு)

திருகோணமலையில் உள்ள கிண்ணியாப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமை உடன டியாக அகற்றுமாறு நாம் உத்தரவிட டுள்ளபோதும் அவர்கள் இதுவரை அகற்றவில்லை.

எனவே, இன்னும் ஓரிரு தினங்களில் இந்த முகாமினை அவர்கள் அகற்றாது விட்டால், போர் நிறுத்த உடன்படிக்கையினை மீறிவதுடன், மேலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை உருவாகும் என போர் நிறுத்த கண்காணிப்புக் குழு துணைத்தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம் அமைக்கப்பட்டுள்ளதை அடுத்து, அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே முரண்பாடுகள் அதிகரித்துள்ளது. இது தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்தும் கூறுகையில்,

சம்பந்தப்பட்ட முகாமிற்கு பல தடவை சென்றுள்ளோம். எங்களிடமிருக்கும் அந்தப்பகுதிக்கான வரை படத்தை நாம் வைத்துப் பார்க்கும்போது அந்த முகாம் அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் தான் இருக்கிறது என்பது எமக்கு தெரிய வந்துள்ளது.

2002ம் ஆண்டும் பெப்ரவரி மாதம் கைச்சாத்தான போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப்பிறகே தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த முகாமினை அமைத்துள்ளார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-10)

# இந்து ஆலயக் காணிகளை சிங்கள மக்கள் அபகரிப்பு

## திருமலையில் அடாவடி தொடர்கிறது

(கிளிநொச்சி)

திருகோணமலையில் உள்ள இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான நிலப்பரப்புக்கள் சிங்கள மக்களால் சட்டவிரோதமான முறையில் அபகரிக்கப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அறிக்கையொன்றையும் இந்த இந்து இளைஞர் சங்கம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

திருகோணமலையில் உள்ள மடத்தடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், சின்னத் தொடுவாய் பிள்ளையார் கோயில் மற்றும் நிலாவெளியில் உள்ள பல கோயில்களினதும் நிலங்கள் சட்ட விரோதமாக சிங்கள குடியேற்ற வாசிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இப்பகுதியிலுள்ள பல கோயில்களின் தீர்த்தக் கேணியாக விளங்கும் பொட்டுக் கிணற்றடி, உயர்ந்தபாடு ஆகியன சிங்கள மீனவர்களால் அபகரிக்கப்பட்டு "சமுத்திரகம" என்ற குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இங்குள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற தலமான கோணேஸ்வர ஆலயப்பகுதி புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்ற அறிக்கையில் கேட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**04.07. 2003**

**(ஆனி 19, வெள்ளி)**

பஞ்சமி மு.இ. 8.55 வரை
மகரம் பி.ப. 2.11 வரை
இராகுகாலம் -10.27-12.57
சுபநேரம்- 3.57-7.27
மாணிக்க வாசகர் குருபூசை

**மேடம்**
செய்தொழில் விருத்தி, உடல் வியாதி, முயற்சி தாமதம், போசன சுகம்.

**இடபம்**
மாதாசுகம், மனச் சஞ்சலம், காரிய தாமதம், பிரயாணம்.

**மிதுனம்**
பிரயாண நன்மை, சகோதரர் உதவி, இனிய சம்பவம், முயற்சி கைகூடும்.

**கடகம்**
காரிய விவாதம், அதிக செலவு, நண்பர் விரோதம், வேலைக்கஷ்டம்.

**சிங்கம்**
போசனசுகம், தேகநலன், பெரியோர் ஆதரவு, நல்ல மனை வாசம்.

**கன்னி**
பிரயாண அலைச்சல், சுப செலவு, முயற்சி தாமதம், திடீர் நன்மை.

**துலாம்**
புகழ், இஷ்ட சித்தி, மேன்மை, தன இலாபம்.

**விருச்சிகம்**
தொழில் நன்மை, நிலை மாற்றம், நல்ல சம்பவம், காரிய அனுகூலம்.

**தனுசு**
காரிய தாமதம், ரோக நிலை, புதிய சிந்தை வயிற்றுவலி.

**மகரம்**
அதிர்ஷ்டம், நண்பர்கள் விரோதம், முயற்சி தாமதம், வாகன பயம்.

**கும்பம்**
சௌக்கிய விருத்தி, கௌரவமான நிலை, போசன சுகம், குடும்ப நன்மை.

**மீனம்**
மன மகிழ்ச்சி, காரிய சித்தி, உடல் நலம் புதிய முயற்சி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்.

# சிற்றூர்திச் சாரதிகள் இடையே முரண்பாடு

## பயணிகள் பயம்! பதற்றம்! பரிதவிப்பு!

## யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் மாலை யாழ். நகரப்பகுதியில் யாழ்ப்பாணம்-புன்னாலைகட்டுவன் சேவையில் ஈடுபடும் 764ஆம் இலக்க சிற்றூர்திச் சாரதிகள் இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் பயணிகள் பெரும் அசௌவுகரியங்களை எதிர் நோக்கினர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் புறப்படவேண்டிய சிற்றூர்தி எதுஎன்பதை தீர்மானிப்பதில் இரு சாரதிகளுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதைஅடுத்து, கோபத்தின் எல்லையில் இரு சாரதிகளும் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இதனால், மேற்படி சிற்றூர்திகளிலும்ஏறிய பயணிகள் செய்வதறியாது திகைத்து நின்றவேளை, முதலி புறப்படும் சிற்றூர்தி எது என்பதை அறியமால் இரண்டிலும் மாறி, மாறி ஏற்றி இறக்கப்பட்டதையும் அவதானிக்கமுடிந்தது.

நேரக்கண்காணிப்பாளர் தலையிட்டை அடுத்து, பின்னர் ஒருவாறு இப்பிரச்சினைக்கு முடிவுக்கு எட்டப்பட்டு, சம்பந்தப்பட்ட சிற்றூர்தியில் ஒன்று பயணிகளை ஏற்றிக்கொண்டு 6 மணிக்குப் புறப்பட்டது.

இதன்காரணமாக, இந்த பயணிகள் வெகு நேரத்தின் பின்பே வீடு திரும்பநேர்ந்தது.

இது இவ்விதமிருக்க குடாநாட்டு வீதிகளில் சிற்றூர்தி மற்றும் பேருந்து சாரதிகள் இடையிலான சண்டித்தனங்கள் வழமையான தொன்றாகிவிட்டதும் இதற்கு தீர்வுகாண எவரும முன்வராததும்இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# அகதிகள் புனர்வாழ்வுக்கு ஜப்பான் அரசு 72 கோடி

(கொழும்பு)

கிராம அபிவிருத்தி மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக ஜப்பானிய அரசாங்கம் 72 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

ஜப்பான் வழங்கவுள்ள இந்நிதியுதவி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக செலவிடப்படவுள்ளது.

டோக்கியோ மாநாட்டில் ஜப்பான் அளித்த நிதி உதவித் தொகைக்கு மேலதிகமாகவே இந்நிதி வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கென ஜப்பான் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் விவகார உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

# வட-கிழக்கு பாடசாலைகளில் கல்விமுன்னேற்ற ஆய்வுகள்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பான ஆய்வொன்று மாகாண கல்வித் திணைக் களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொதுப்பரீட்சைகள் மற்றும் வலய மட்ட பரீட்சைகள் என்பனவற்றில் மாணவர்கள் சித்தியடையும் விதத்தை அடிப்படையாகக்கொண்டு, கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை தொழில் நுட்ப முறையில் மாற்றி அமைக்கும் நோக்குடன், இவ் ஆய்வு நடத்தப்பட்டு வருவதாக மாகாணக் கல்வி அமைச்சர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கலவித் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாற்றி அமைக்குமாறு சகல அதிபர்களுக்கும் அவர் வலிறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

# அடியார்களின் அல்லல் போக்கும் சிதம்பர நடராசனின் ஆனி உத்தர வழிபாடு

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ? தில்லை நடராசரைக் காணாமல் இருப்பேனா? என்பது தில்லை நடராசப்பெருமான் மேற்பக்திபூண்ட அன்பரின் பாடல்வரிகளாகும். சிதம்பரத்திலே திருநடம் புரியும் நடராசப்பெருமானை வழிபடு



வது பேரின்பப் பேறாகும். சிதம்பரத்தில் தில்லை நடராசப் பெருமானின் ஆனந்த் தாண்டவத்தைக் கண்டு இன்புற்ற அப்பர், திருநாவுக்கரசு சுவாமிகள் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே எனவும்,

காரைக்கால் அம்மையார் ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க வேண்டுமெனவும் கூறிய அடிகளால் தில்லை நடராசப் பெருமானின் திருநடனம்கண்டு வழிபடுவது எத்துனைச் சிறப்புப்பெற்றது என்பதை அறியமுடிகின்றது.

முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் ஆனி உத்தர நன்நாளிலே தில்லையில் சிவகாமி அம்பாள் சமேதராக நடராசப்பெருமான் திருநடம்புரிந்த காட்சியைக்கண்டு தொழுதார்கள். ஆட்டுவித்தாள் யாரொருவர் ஆடாதாரே எனும் நல்வாக்கிற்கு அமைய இறைவன் திருநடனமே இவ்வுலகினை ஆட்டிப் படைப்பதாய் இருப்பது எமது வழிபாட் டின் பெரும் தத்துவ உண்மையாகும்.

தில்லைக்கூத்தனாகிய நடராசப்பெருமானின் திருநடனமே மக்களின் அல்லல்களைப் போக்கி அருள் தரவல்லது என்பதனையே

தில்லையம் பல நடராசா
செழுமைநாதனே பரமேஸ் வரா!
அல்லல தீர்த்தாட வா! வா! வா!
அசைந்தாடி வா! வா! வா!

எனும் இனிமையான பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆனி உத்தர நன்னாளிலே தில்லைக்குச்சென்று வழிபட முடியாதவர்கள் தமக்கு அண்மித்தாயுள்ள சிவாலயங்களில் சிவ மூர்த்தங்களையும், நடராச மூர்த்தங்களையும் கண்டும், விழாக்கள் செயதும் வழிபாடுகள் நடாத்துகின்றனர். யாழ்ப்பாணமக்கள் காரைநகர் சிவன் கோவிலிற்குச் சென்று வழிபாடுகள் நடாத்துவதனை ஆனிஉத்தர தரிசன நன்நாளிலே காணக்கூடியதாகவுள்ளது.

குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
- குமின்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
- பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்

## வெள்ளி நற்சிந்தனை

- காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
- மானிலத்தே

என அப்பர் சுவாமிகள் தேவாரப் பதிகத்திலே சிதம்பர நடராசப் பெருமானின அருட்திருக்கோலத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

இம்மையிலும், மறுமையிலும் நற்கதியடைய மிகச்சிறந்த வழிபாட்டு விரத நன்நாள் ஆனிஉத்தர

## நீர்வைமணி

நட்சத்திரமாகும்.

இந் நன்நாளிலே நாமும் சிதம்பர நடராசப் பெருமானை மனத்தில் நினைந்து வழிபாடுகள் செய்தும், விரதமிருந்தும் தான தர்மங்கள், பூசைவிழாக்கள் நடாத்தியும் நற்பேறடைய முயல்வோமாக.□

# பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திகள் அதிகரிப்பு

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்ட பனை அபிவிருத்திச்சபை தனது உற்பத்திகளை வெகுவாக அதிகரித்துள்ளது.

இந்தவகையில், திருக்கேதீஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னட்டு பத்தாயிரம் பனைஓலை அர்ச்சனைப் பெட்டிகளை விற்பனையின்பொருட்டு பனை அபிவிருத்திச் சபை திருக்கேதீஸ்வரத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

அத்துடன், திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பெருமளவு சிங்களவர்கள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில், அவர்கள் மத்தியில் பனம் பண்டங்கள் மற்றும் பனம்பொருள் உற்பத்திகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்ற காரணத்தினால் அங்கு பனம் பொருள் விற்பனைநிலையம் ஒன்று திறப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இம்மாதம் இந்துக்களால் அனுட்டிக்கப்படவுள்ள ஆடிப்பிறப்பு தினத்தை முன்னிட்டு பனை வெல்லத்திற்கான கேள்வி அதிகரிக்கும் என்ற அடிப்படையில் குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ.சங்கங்கள் அனைத்திற்கும் விற்பனைகாக பனைவெல்லம் விநியோகிக்க விருப்பதாக யாழ்.பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்தார்.

இதேவேளை, ஏ-9பாதை திறக்கப்பட்ட பின்னர் பனம் பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்திருப்பதும் கடந்த கால போர் நடவடிக்கைகளால் பெருமளவு பனைகள் படையினரால் தறிக்கப்பட்ட காரணத்தினால் கேள்விக்கேற்றவாறு நிரம்பல்செய்ய முடியாதநிலை ஏற்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-43)

# பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ள சிற்றூழியர்களை உடனடியாக வேலை நீக்கம்செய்ய உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் சிற்றூழியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து வேலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தொடாபாக சுகாதாரஅமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஊழியர்களின் விடுப்புகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாகவும் கடமைக்குச் சமுகமளித் திருக்காத சிற்றூழியர்கள் அனைவரும் தத்தமது பதவிகளிலிருந்து விலகியதாக கருதப்படுவார்கள் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தை மேற்கொண்டுள்ள அகில இலங்கைச் சுகாதார சேவைகள் சங்கம் மற்றும் வேறுநான்கு சங்கங்களும், சம்பள உயர்வையும், வேறு வசதிகளையும் கோரிக்கையாக முன்வைத்துள்ளமை தெரிந்ததே.

சுகாதார அமைச்சின் செயலாளர் றெஜி பெரேரா ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அச் சுற்றறிக்கையில்,

மேலும் சிற்றூழியர்கள் அனைவரையும் உடனடியாக வேலைநீக்கம் செய்யும்படி உத்தரவிட்டுள்ளது. சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை முழுமையாகவும், உடனடியாகவும் அமுல்படுத்தப்பட வேணடும் என்றும் கோரப்பட்டுள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை வேலைநீக்கம் செய்வதென்ற தீர்மானம் சுகாதாரஅமைச்சில் நடைபெற்ற அவசர கூட்டமொன்றில் எடுக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி வேலைநீக்க உத்தரவுபற்றி தமக்கு எதுவுமே தெரியாது எனறு தொழிற்சங்க அலுவலர் ஒருவர் தெரிவித்தார். நோயாளிகளை அனுமதித்தல், சமயல், விநியோகம், அலுவலகம், உபகரணங்கள், பேணல் ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

டாக்டர்கள் சிரமங்களுடன் தமது பணிகளை மேற்கொண்டுள்ளதாக தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர். ஹெக்டர் ,வீரசிங்க தெரிவித்துள்ளார். (உ)

# கைதிகள் வருமானமிட்ட வழி சிறைச்சாலைதோறும் தொழிற்சாலை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்துவைகப்பட்டுள்ள கைதிகளுக்கு வருமானம் கிடைக்கும்வகையில் தொழில் வாய்ப்புக்களை ஏறபடுத்திக் கொடுக்க சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தவகையில், ஆடைதயாரிப்பு தொடர்பாக கைதிகளுக்கு பயிற்சியளித்து, சிறைச்சாலைகளுக்குள்ளே அவர்களுக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறூம் மன்சூக் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு இணங்க, சிறைச்சாலைகள் தோறும் தொழிற்சாலைகள் நிறுவப்படவுள்ளன.

இத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் கைதிகளுக்கு மாதந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதுடன் கைதிகளின் விருப்பத்திற்கு ஏறப சம்பளத்தின் ஒரு பகுதி அவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் முதலாவது தொழிறசாலை கண்டி போகம்பரை சிறைச்சாலையில் எதிர்வரும் 14ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது. (தி)

# பெற்ற பிள்ளைகளை வதைத்த தந்தை பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தனது இருபிள்ளைகளினதும் உடம்பில் பழுக்கக் காச்சிய குடைக்கம்பியினால் சூடுபோட்ட தந்தையாரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் பலாங்கொடை பொலிஸ் பிரிவற்குட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது,

மேற்படி இரு பிள்ளைகளினதும் தாயார் 2வருடங்களுககு முன்னர் இவர்களைப் பிரிந்துசென்று வேறொருவரை திருமணம்செய்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி இரு பிள்ளைகளும், தந்தையாருடனேயே வாழ்ந்துவந்தனர்.

சமபவ தினத்தன்று வீட்டில் இருந்த ஒலிநாடாஒன்று காணாமல் போயவிட்டதாக கூறிய தந்தை, நெருப்பில் காச்சிய குடைக்கம்பிகளால் இரு பிள்ளைகளினது உடலெங்கும் சூடு போட்டுள்ளார்.

துவன் குணவர்த்தனா, சுவ்ணலதா ஆகிய இரு பிள்ளைகளுமே இவ்வாறு தந்தையின் சித்திரவதைக்கு ஆளாகி இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(உ-10)

# செய்தித் துளிகள்

## கூரைஇல்லாத பேருந்துதரிப்பிடம்

(அளவெட்டி)

அளவெட்டி கூட்டுறவாளர் வீதியில் மல்லாகம் ப.நோ.கூ.சங்கத்திற்கு அருகில் உள்ள பஸ்தரிப்பிடம் கூரையில்லாது இருப்பதால் அவ்விடத்தில் பஸ்ஸிற்காகக் காத்திருப்போர் வெய்யில் மத்தியில் அவஸ்ததைப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி பஸ்தரிப்பிடக் கூரை கடந்த இரு மாதங்களின் முன்பு வீசியமினி சூறாவளியின்போது தூக்கி வீசப்பட்டகூரையை மீண்டும் பொருத்த எவரும் நடவடிக்கை எடுக்காததனாலேயே இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. (உ-83)

## நீண்டகால கடன்திட்டம்

(ஆனைக்கோட்டை)

வீடமைப்பு மற்றும் வீட்டுப் புனரமைப்புக்கென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 50ஆயிரம் ரூபா நீண்டகால கடன்திட்டம் ஒன்றினை யாழ்.குடாநாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

10வருடங்களைக் கொண்டதான இக்கடன் திட்டத்தின் பயனை சொந்தக்காணியுள்ள எவரும் அனுபவிக்கலாம் எனவும் இதற்கான விண்ணப்பப்படிவத்தினை தேசிய வீடமைப்பு அபிவருத்தி அதிகார சபையின் யாழ்.கச்சேரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-201)

## யாழ்.கல்வியியற் கல்லூரியில்இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற்கல்லூரியின் 3ஆவது நிறைவு விழா நிகழ்வுகளில் 2 வது நாளான இன்று வெள்ளிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பேராசிரியர் சந்திரசேகரம் நினைவுப் பேருரையினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சபா.ஜெயராசா 'ஆபத்து விளிம்பில் கற்போர்' என்ற பொருளில் உரை நிகழ்த்தவுள்ளார். (உ-10)

## ஒத்துழைப்பு கோரல்

(சுதுமலை)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் எதிர்வரும் 14-21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ள உளளூராட்சி வாரச் செயற்பாடுகளிற்கு தமது பிரிவுகளில் உள்ள உளளூராட்சி மன்றங்களைப் பூரண ஒத்துழைப்பு உதவிகளை வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளையும் கடிதமூலம் கோரியுள்ளார்.(உ-252)

## வாகரை டிப்போ ஊழியர்களுக்கு சம்பளம்இல்லை

(கொழும்பு)

நியூ ஈஸ்ரேன் பஸ்கொம்பனியின் கீழ்இயங்கும் வாழைச்சேனை, மற்றும் வாகரை உபடிப்போ ஊழியர்கள் 140 பேருக்கு கடந்த ஜூன் மாதம்வரை சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துச் சாலைகளில் பஸ் நடத்துநர்கள் மற்றும் சாரதிகளுக்கு மாதாந்தம் 8ஆம் திகதியும் ஏனைய ஊழியர்களுக்கு 26ஆம் திகதியும் சம்பளம் வழங்கப்படுவது நடைமுறையாகும்.

ஆனால், இவ்விரு டிப்போ ஊழியர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக நியூ ஈஸ்ரேன் பஸ் கொம்பனியின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்விரு சாலைகளும் பெரிதும் நட்டத்தில் இயங்கிவருகின்றன இச்சாலைகளில் கடமையாற்றும் 140 ஊழியர்களுக்கு ஒருமாதச் சம்பளக் கொடுப்பனவாக 8இலட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார். (தி)

## சைவத்திருமுறை விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச்சங்க 'சைவத்திருமுறை விழாவும் சைவசமய செயற்பாட்டுப் பரிசளிப்பு விழாவும்' எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30க்கு இழைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-15)

## வருடாந்தஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேலை வண்ணைநகர் ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 12ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் 13ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (பி-15)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காம மகோற்சவ கால ஆன்மீகத்தொடர் சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை 'ஆர்கொலோ சதுரர்' எனும் தலைப்பில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் உரையாற்றவுள்ளார். (உ-8)

## இலவச தேவார பண்ணிசைவகுப்பு

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபையின் பாடத்திட்டத்திற்கு அமைய, அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் ஆலயங்கள்தோறும் நடாத்தப்பட்டு வருகின்றன.

பிரதி சனிக்கிழமைதோறும், காலை 10.30மணிக்கு யாழ்ப்பாணம் சத்திரத்து ஸ்ரீஞானவைரவர் ஆலயத்திலும், மாலை 5மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்திலும் இவ் இலவச இசை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ் வகுப்புக்களை, கலாபூசனம் இரா. திருஞானசம்பந்தன் முன்னின்று நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-15)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (உ-10)

## இலவச நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் திருக்கேதீஸ்வரத்தில் திருக்கேதீஸ்வர திருப்பதிகங்கள், திருமறைக்காட்டுத் திருப்பதிகங்கள் அடங்கிய நூல் இலவசமாக வெளியிடப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இந்நூலைப் பெற விரும்புகின்றவர் அரசடி வீதியில்உளள மன்ற பிரதான காரியாலயத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்காப்பட்டுளது. (உ)

## சம்பள உயர்வுகுறித்து விசேட உரை

(கொழும்பு)

அடுத்த ஆண்டுமுதல் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள சம்பளஉயாவு குறித்து நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி இம்மாதத்துக்குள் விசேட உரைநிகழ்த்தவுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


சம்பளஉயர்வு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம், மற்றும் அதுதொடர்பான ஏனைய விடயங்கள் இவ்வுரையில் உள்ளடக்கப்படவுள்ளன. (தி)

## வெள்ளி முற்றம்

# தேடல்...... ஒன்று

### ச. நிரஞ்சனி

காரின் கருமையான யன்னலினூடு இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தான் அவன். மழை வெளியே இலோசாகத்தூறிக் கொண்டிருந்தது. இடையிடையே வானவில்லும் தோன்றி மறைந்தது கொண்டிருந்தது. காரினுள்ளே செயற்கையாக வீசிக்கொண்டி ருந்த காற்று அவனுக்குப்பிடித்த மானதாய்யில்லை. எனினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தக் காற்றைத் தான் அனுபவிக்க வேண்டிய நிலை அவனுக்கு. பல நாட்கள் பழகியிருந்தும் கூட அந்த செயற்கையான காற்று அவனுக்கு பிடிப்பதில்லை. அவன் பிறந்து வளர்ந்த இடத்தின் இயற்கையான காற்றின் கிளு கிளுப்புத்தான் அவனுக்குப் பிடிக்கும். ''அப்....பா இன்னும் எவ்வளவு தூரம் போகோணும்'' என்ற அபிதாவின் மழலைக்குரல் கேட்டு நிமிர்ந்தவன் ''ஏனடா பசிக்குதே ஏதேன் சாப்பிட.... '' அவன் கூறி முடிக்கும் முன்பே ''எனக்குப்பசிக்கேல்லை... அம்மாவைப் பாத்து எத்தனை நாள்... அம்மாட்டை எப்பபோவம்'' என்று கேட்டுவிட்டு தன் பிஞ்சுக்கரங்களை உயரே தூக்கி சோம்பலை முறித்துக்கொண்டாள் அபிதா. அந்தக் குழந்தையின் அறியாமையை உணர்ந்தபோது அவனுக்கு இயல்பாக இருந்த சோகம் பன்மடங்கு பெருகிற்று. அவளுக்குஇப்போது தான் நான்கு வயது. மனதில் தோன்றும் வினாக்களை கோர்வையாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். கலங்கிய விழிகளை குழந்தையின் முன் துடைக்காது அவன் அப்பால் திரும்பித்துடைக்கவும் '' என்னப்பா பூச்சியே'' என்று அவள் கேட்கவும் சரியாக இருந்தது. என்ன பதிலை குழந்தைக்கு கூறுவது என்று தடுமாறியவன் ''அது... ஒண்டுமில்லை. ஏதோ தூசடா'' என்று குழந்தையை ஒருவாறு சமாதானமாக்கி விட்டு காருக்கு வெளியே பார்வையைத திருப்பினான். இவன் வெளியே அக்கறையாய்ப் பார்ப்பதைக்கண்ட அபிதா தானும் வினாக்களைத் தொடுக்காமல் அமைதியாய்ப் பார்த்துக்கொண்டு வந்தாள். ஆனால் நெடுநேரம் அவளால் மௌனத்தைக் காக்கமுடியாது போயிற்று. இலைகள் எதுவுமேயற்று தூண்கள் போன்று நின்றிருந்த பனை மரங்களையும்,தென்னை மரங்களையும் கண்டு விட்டு ''ஏனப்பா இப்பிடி.... இலை ஒண்டையும் காணேல்லை.... அப்ப ஏன் இப்பிடி நிக்குது'' என்று அப்பாவியாய் வினாவினாள். இவன் அவளைதேற்றுவதற்காக ''முந்திச் சண்டை நடந்ததெல்லோ.... அது தான்'' என்று கூறுமுன்பே ''ஏனப்பா இப்படிச் சண்டை நடந்தது. என்ன... மரங்களை என்னத்துக்கு....முறிச்சது. என்று தடுமாறினாள். இவன் கதையை திசை திருப்ப ''அபி... அங்கை பாரடா ஒரு வெள்ளைப் பூனைக்குட்டி'' என்று கூறினான். ஏனென்றால் அவனுக்குப் புரிந்தது. இந்தச்சின்னஞ்சிறு பிஞ்சுக்கு எப்படிக் கூறினாலும் அவள் இப்போது நிலைமையை உணரமாட்டாள். வினாக்களை தொடுத்தவண்ணமே இருப்பாள். அதனால் அவளுக்கு வேறு சிறு சிறு கதைகளை கூறிக்கொண்டு இருந்தான். அப்போது காரின் ஓட்டுநர் அவனிடம் ''அந்த றோட்டிலை எத்தனையாவது வீடு'' என்று விசாரித்தான். இவன் பதில் கூறுவதை இடைமறித்த அபிதா ''ஒரு சி...சிவப்பு கடதாசி மல்... லிகைப் பூ நிற்கிற வீடு'' என்றாள். இவன் அபிதாவை சிறிது நேரம் பார்த்து விட்டு பெருமூச்செறிந்தான். ஏனென்றால் அந்த பூ மரம் எப்போது நின்றது. அது இப்போதும் நிற்குமாம்? நின்றால் அவனுக்கும் மகிழ்வு தான். ஏனென்றால் அவனது அன்பு மனைவி மோகனா ''அழகாக வீடு வாயிலில் உயர்ந்து நிற்கட்டும்'' என்று கூறி எப்போதோ நாட்டிய மரம் அது.



''சாவகச்சேரி உங்களை வரவேற்கிறது'' மூன்று மொழிகளாலும் ஒரு பலகையில் எழுதப்பட்டிருந்தது. காரும் நகர்ந்த வண்ணமாயிருந்தது. அதுமட்டுமல்ல காரினுள்ளே பாட்டும் கசெட்டில் கேட்டுக்கொண்டுதானிருந்தது .பல தூரம் சென்றதும் வீட்டு வாயிலி இவன் சொன்ன குறிப்பின் படி கார் வந்து நின்றது. பல நாட்கள் கழித்து வந்ததனால் வீதியால் செல்வோர். அனைவரும் தன்னைப்பார்ப்பது போன்ற உணர்வு அவனையறியாது ஏற்பட்டது. மதிற் சுவரோடு நின்ற கடதாசி மல்லிகை மரம் நிற்கிறதா என்று பார்த்தான். இருந்தது சிறிய தூளிராய் மண்ணோடு மண்ணாக பூக்கள ஏதுவு மின்றி நின்றது. ''தம்பி... என்ன... இப்படியே நிண்டா-வாவன்'' என்று அழைத்த தாயின் குரலால் சுய நினைவிற்கு வந்தவன். குழந்தையை அழைத்துக்கொண்டு சென்றான். பாசத்தால் பிணைந்திருந்த தாய் ஆவலுடன் ஓடி வந்து அபிதாவைத தூக்கி அணைத்துக் கொண்டாள். ஆனால் குழந்தையோ சிறிது நேரம் இவனின் தாய்யின் அரவணைப்பில் இருந்து விட்டு பின்னர் தன்னை விடு வித்துக்கொண்டு இவனின் தாயிடமும் இவனிடமும் ''அம்மா எங்கை... காணேல்லை.... எங்கை'' பேசாமலேன் நிக்கிறிங்கள் என்று கேட்டாள். தாய் மௌனமாக இவனைப்பார்க்க. இவன் தாயைப்பார்த்தான். கலங்கிய விழிகளை சோலைத் தலைப்பால் துடைத்த தாய், சமயல் அறையினுள் புகுந்து கொண்டாள். இவன் தரையைநோக்கி பார்த்த வண்ணம் இருந்தான் ''ஒரு சின்னக் குழந்தையின் வார்த்தை எவ்வளவிற்கு ஒரு மனிதனை மனம் மாற்றுகிறது'' அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. கேள்வியாக நோக்கிக் கொண்டிருந்த குழந்தையிடம் ''அம்மாவைட் பிறகு பாப்பம். பிள்ளையின்ரை புதுப் பொம்மையை ஒருக்கா எடுத்து வாங்கோ பாப்பம்'' என்று கூறவும் அவள் உள் நுழைந்து எதையோ தேடிக்கொண்டிருந்தாள். இவன் ஆச்சரியமாய் உள்நுழைய அறைக்குள் இருந்த அபிதா ''அந்த டான்ஸ் ஆடுகிற பொம்மை... அம்மா வாங்கித்தந்தா எங்கை காணேல்லை.'' அழத் தொடங்கி விட்டாள். அவளுக்கு எங்கே புரியப்போகிறது இடம்பெயர்ந்து இரண்டு வருடம் கழித்து மக்கள் திரும்ப வந்து குடியேறிய இடம் என்று. தற்செயலாய் சுவரை நிமிர்ந்து பார்த்த அபிதா ''இஞ்சை அம்மாண்டை படம். ஏன்... ''அம்மாவை கூட்டி வாங்கோவன்'' கேட்டவாறு அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனின் மனைவியின் அதே அன்பான பார்வையை இப்போது .மகள் பார்க்கிறாள்.


''மோகனா'' இது தான் அவனின் மனைவியின் பெயர். அவனின் வாழ்விலே ஒரு இனிமையான தென்றலாய் விளங்கிய அவள்- அவள் ஒரு புதுமைப் பெண். பொறாமையாலும் கர்வத்தாலும் நிமிர்ந்து நடக்கின்ற நவீனமாந்தரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவள் அவள். அவளுக்கென்றும் சில ஆசைகள் இருந்தன. ஆனால் சுயநலமானவையாக இருக்கவில்லை. பணம் படைத்தவளாக இருந்த போதிலும் ஏழைகள் மீது இரங்குபவள். எத்தனையோ இடங்களுக்கு நன்கொடைகளை வழங்கி திருப்தியடைபவள் அவள். இவனுக்கு தோள்ளோடு தோள் நின்று ஒத்துழைப்பு நல்குபவள். அவள் ஒரு அதிர்ஷ்ட தேவதை. இவ்வளவு சிறப்புடையவளுக்கெதிராக விதி சதி செய்து விட்டது. மரணதேவன் செஷ் வடிவில் அவளை தன்னுடன் அழைத்துக் கொண்டான். அப்போது வாழ்வே வேறுப்பது போல் இருந்தது அவனுக்கு. என்ன செய்வதென்றே அவனுக்கு புரியவில்லை. வாழ்ந்தே ஆகவேண்டிய கட்டாயம். இறுதியாக ஒரு மன நிம்மதி ஏற்பட தாயிடம் கூறி அபிதாவுடம் வேற்று நாடு சென்று இயந்திரமய வாழ்வு வாழத் தொடங்கி விட்டான். பிற நாட்டு நடைமுறைகள் அவனுக்கு புதிதாகத்தான் இருந்தன. இப்போது தாய்ப்பாசம் தொடர இங்கு வந்திருக்கிறான்.

அவன் சுவரையே பார்த்துக்கொண்டு நின்றான். தெய்வத்துள் தெய்வமாகிவிட்ட மோகனா மிகவும் இனிதாகப் புன்சிரிப்புடன் சுவரில் மாட்டப்பட்டிருந்த படத்தில் காணப்பட்டாள்.''தம்பி முகத்தைக் கழுவிப்போட்டுவா ரீ போடுறன்'' என்றவாறே சமையல் அறையுள் தாய் நுழைந்தாள். சிறிது நேரத்தின் பின்னர் இவனின் தங்கை பதறிய வாறே ''அண்...ணா இஞ்சை அபி மண்ணுக்கை கை எல்லாம் வைச்சு விளையாடுது'' என்றபடி ஓடிச்சென்று அபிதாவை தூக்கினாள். அபிதாவோ ''நான் மண்ணி... லை விளையாட....'' என்று கண்களைக் கசக்கினாள். பிறகு மீண்டும் வந்திருந்து மண்ணைக்குவித்து ஏதே உயரமாகக் கட்டினாள். இவன் தன்னைப் பார்ப்பதைக்கண்ட அபிதா இவனருகில் எழுந்து வந்து மழலைக குரலில் ''அங்கை...நிண்ட இடத்திலை இப்பிடி மண்ணிலை. விளையாடேலாது. இது... எங்கடை வீடு.... தானை எனப்பா'' கெஞ்சி விட்டு மீண்டும் விளையாடினாள். இவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. சிறு குழந்தைகளுக்கு எத்தனைன் விதமான ஆசைகள் என்று தான் எண்ணினான். வீட்டைச்சுற்றி பார்ப்பதற்காக எழுந்து சென்று சூழலை அவதானித்தான். இவன் அப்பால் செல்வதை அவதானித்த தாய் தம்பி... உதுகளுக்கை போகாதை. மிதிவெடியளெல்லாம் கிடக்கு என்று கூறினாள். இவன் தனது வீட்டில் நின்றே பார்த்துக்கொண்டிருந்தான். இவனது காணியைத்தவிர அடுத்த காணிகளிலுள்ள மரங்கள் பூதாகரமாக வளைர்ந்திருந்தன. இவனால என்ன செய்யமுடியும் அயலவர்களுக்கு ஏதும் கூறினாலும் வீண் தொல்லை. ஏன் என்று விலகி விட்டான்.

மீண்டும் அவன் வீட்டினுள் நுழைய அபிதா அயல் வீட்டு சிறுசுகளுடன் உட்கார்ந்திருந்தாள்.சின்னஞ்சிறுசுகளுக்கு நாடுவில் இருந்து அவள் அன்பாக பழகியதைக் கண்டதும் அவனுக்கு பெருமிதமாகத்தானிருந்தது. அந்த சிறுசுகள் இவள் வைத்திருந்த விளையாட்டுப் பொருட்களை ஏக்கமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தன. இவனுக்குப் புரிந்தது. எல்லோருக்குமே ஏதாவது துன்பம் வந்து கொண்டுதானிருக்கிறது என்று. ஆனால் இவன் சற்றும் எதிர்பாராதவாறு அபிதா விளையாட்டுப் பொருட்களில் சிலவற்றை எடுத்து ''இது கலைக்கு... இது உனக்கு...'' என்று கொடுத்துக் கொண்டிருந்தவள் இவனை நிமிர்ந்து பார்த்து ''அப்பா கலைக்கு அம்மா தான் சாப்பாடு தீத்தினவா எனக்கு எப்ப அம்மா வருவா'' என தன் கருவிழிகளை உருட்டியவாறு கேட்டாள். இவன் ஒன்றுமே கூறாதிருக்கவும் மீண்டும் விளையாட்டில் ஈடுபட்டாள். அபிதா எப்போதுமே ''அம்மா எங்கை அம்மா எங்கை'' என இவனிடம் வினவியதால் ''அம்மா சாமீற்றைப் போட்டா'' என்று அன்று கூறினான். ஆனால் அவளோ புரிந்து கொள்ளவில்லை. புரிய முடியாதவயது தானே அவளுக்கு. இதனால் உடனே ''நாங்கள் சாமீட்டை போக்கூடாதே'' என்று பதில் கேள்வி கேட்கவும் இவனுக்கு என்ன கூறுவதென்றே புரியாது போயிற்று.அதிர்ச்சியில் உறைந்தான். சிறிது நேரத்தில் ''அபிகுட்டி நீ நல்லாய்ப்படிச்சு கெட்டிக்காரியா வந்தாத்தான் அம்மாவுக்கு எனக்கு சந்தோஷம். இப்படி நெடுகக்கேட்டா என்ன செயயிறது'' என்று கூறினான். கையில் உணவுடன் வந்த தாய் அபிதாவின் வாய்க்குள் உணவினை ஊட்டிக் கொண்டிருந்தாள். அவன் தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். ஏனென்றால் அவனின் அருமை மகளுக்கு இனி வரும் காலங்களில் நிலமைகள் புரியும். தாய் எங்கு என்று புரியும். தாய் இறந்ததை அறிந்தால் பிஞ்சு மனம் தாங்காது.அவனாலேயே சோகத்தை அடக்க முடியவில்லை. ஆனால் விதியைத் தான் யாராலும் தடுத்து நிறுத்த முடியாதே. என்றாலும் அபிதாவும் ஒரு இலட்சியப் பெண்ணாக வாழ்வாள் என்று நம்பிக்கை அவனுக்கிருந்தது. மோகனாவின் மகளுக்கு மோகனாவின் குணங்கள் இல்லாமலா போய்விடும்.

இவனது கருத்தை ஆட்சேபிப்பதாய் வானில் ஒரிரு விண்மீன்கள் ஆங்காங்கே கண்சிமிட்டிக் கொண்டிந்தன.

*




நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 2003/ 2004 வருடத்திற்கான புதிய நிர்வாகிகளின் பதவி ஏற்பு வைபவம் 20.06.2003 வெள்ளிக்கிழமை யா.ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சர்வதேச லயன்ஸ் கழக 306-B மாவட்ட உப ஆளுநர் லயன் எஸ். சிவானந்தன் அவர்கள், லயன் இ.இராஜகுலேந்திரனை தலைவராகவும் லயன் .இ ஜனக்குமார் அவர்களைச் செயலாளராகவும் ,லயன் வி. தயாபரன் அவர்களை பொருளாளராகவும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## யாழ். குடாநாட்டில் 50சிறுவர் இல்லங்கள் பதியப்பட்டவை மூன்று மாத்திரமே

# பதியப்படாத சிறுவர் இல்லங்களில் துஷ்பிரயோகங்கள் நிகழ வாய்ப்பு

### யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு கருத்து

(யாழ்ப்பாணம்)

பதிவு செய்யப்படாது இயங்கி வரும் சிறுவர் இல்லங்களிலேயே சிறுவர் உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெற கூடுதலான வாய்ப்புகள் இருப்பதாக யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலை அறை இலக்கம் - 30இல் இயங்கி வருகின்ற இந்தச் சிறுவர் பாதுகாப்புக்குழு, கடந்த காலங்களில் மேற்கொண்ட அவதானிப்புக்கள், ஆய்வுகளின் அடிப்படையிலேயே இதனை ஆதாரப்படுத்தியுள்ளது.

யாழ்.குடாநாடு முழுவதிலும் மொத்தமாக 50சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கம், இருபாலை பெண்கள் இல்லம், நெல்லியடி பரமானந்தா ஆச்சிரமம் தவிர்ந்த ஏனைய 47சிறுவர் இல்லங்களும் பதிவு செய்யப்படாமலேயே தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

இவற்றைப் பதிவு செய்யுமாறு பல தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அந்த அழைப்புக்கள் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன.

- சிறுவர் இல்லங்கள் அமைப்பதற்கென சில வரையறைகள், கட்டுப்பாடுகள் உள்ளன.
- சிறுவர் இல்லத்தில் சூழலில் பாடசாலை, வைத்தியசாலை, விஸ்தாரமான விளையாட்டு மைதானம் என்பன இருக்க வேண்டும்.
- ஒரு பிள்ளைக்கு 30சதுர அடி என்ற அளவுக்கு பிரமாணத்தில் தங்கும் இடம் அமைய வேண்டும்.
- பொலிஸ் அதிகாரிகள், சுகாதார மற்றும் வைத்திய அதிகாரிகள் சமூக அபிவிருத்தித் தொண்டர்கள் ஆகியோரின் தொடர்புகள் இருத்தல் ஆகியன சிறுவர் இல்லம் ஒவ்வொன்றுக்கும் அத்தியாவசியமானவை.

இந்த வரையறைக்குள் அமைக்கப்படாத சிறுவர் இல்லங்களையே பதிவு செய்வதில் நிர்வாகிகள் தயக்கம் காட்டி வருவதாய் அறியப்படுகிறது.

இவற்றைப் பதிவு செய்யும் பட்சத்திலேயே சமூக அபிவிருத்தி மற்றும் தொண்டர் நிறுவனங்களின் உதவிக் கரங்கள் சிறுவர் இல்லங்களை நோக்கி நீட்டப்படும் என்று யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேற்படி 50சிறுவர் இல்லங்களிலும் சுமார் 2ஆயிரத்து 500சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளமை கணக்கெடுப்புக்கள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-4)

## ஜனாதிபதி —பிரதமர் இணைத் தலைமையில்

# உயர் மட்ட நிவாரணக் குழு அமைக்க யோசனை

(கொழும்பு)



பேரழிவுகள், அதற்கான நிவாரணம் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களைக் கவனிப்பதற்கென புதிய சட்டம் ஒன்றை அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய நிவாரண முகாமைத்துவ கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர்களான கரு ஜெயசூரிய, திலக்மாரப்பன, ரவீந்திர சமரவீர, ஜோன்அமரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.


புதிய சட்டத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள உயர்மட்ட நிவாரணக் குழுவில் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தலைமைப் பதவியை வகிப்பார்கள்.

தேசிய நிவாரண முகாமைத்துவ கவுன்சில் நிவாரண முகாமைத்துவத்துக்கான அமைச்சரவை உபகுழு, மனிதப் பேரழிவு முகாமைத்துவ கவுன்சில் ஆகியனவும் புதிய உயர்மட்டக் குழுவுடன் இணைக்கப்படவுள்ளன.

இதேவேளை, அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக வீடுகளை இழந்தோருக்கென ஜனாதிபதி நிதியத்திலிருந்து 205 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

அத்துடன், வெள்ளத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கான நஷ்டஈட்டுக் காசோலைகளை பாதிக்கப்பட்டவரிடமே நேரடியாக வழங்க வேண்டுமெனவும், அதனை உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமெனவும் ஜனாதிபதி முதலமைச்சர்களைப் பணித்துள்ளார்.

மேலும் கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த மழை மற்றும் மண்சரிவு காரணமாக 8ஆயிரத்து



653வீடுகள் முற்றாக அழிந்துள்ள நிலையில் அவற்றிற்குரிய நஷ்டஈடாக தலா 10 ஆயிரமும், சாதாரணமாக தேசமடைந்துள்ள 23ஆயிரத்து 533வீடுகளுக்கு ஈடாக தலா ரூ5 ஆயிரமும் வழங்கப்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## காவல்வேலி அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடான தில்லைச் சிவனின் காவல்வேலி சிறுகதைத் தொகுப்பு நூலின் அறிமுக விழா நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

# பொங்கு தமிழில் பங்கேற்றமை குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு பிரதமரின் செயலாளர் விளக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 27ஆம்திகதி நடைபெற்ற 'பொங்குதமிழ்' விழாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மேலதிக ஊடகச் செயலாளர் சமன் அதாவுடஹெட்டியும், பிரதமரின் சலுகை உதவிச் செயலாளர் கே.பத்மநாதனும் கலந்து கொண்டதேன்? என்பது பற்றி விளக்கமளிக்கும் வகையில் அறிக்கையொன்று சமன் அதாவுட ஹெட்டியினால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைகளின் விபரம் வருமாறு,

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்தமாத இறுதிப் பகுதியில் நடைபெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்வில் நான் கலந்து கொண்டது தொடர்பாக ஊடகங்கள் பல பல்வேறு விதமான கருத்துக்களை தெரிவித்துள்ளன.

'பொங்குதமிழ்' என்பது பால் பொங்குவதைப்போல் தமிழ் மக்களின கருத்துக்களை சுதந்திரமாகவும், ஒளிவு மறைவின்றியும் செயற்படக் கூடிய விதத்திலும் எடுத்துக் கூறுவதாகும்.

அத்துடன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களின் அழைப்பை ஏற்றே நான் பொங்கு தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்தேன்.

அங்குள்ள தமிழ் மக்கள் கருத்துக்களை மொழிபெயர்ப்புச் செய்யும் நோக்கிலேயே எமது அலுவலகத்தைச் சேர்ந்த உதவிச்செயலாளர் கே.பத்மநாதனும் இணைந்து கொண்டார்.

இம்முறை நடைபெற்ற மேற்படி பொங்குதமிழ் விழாவில், தமிழ் மக்கள் தமது பரம்பரை இருப்பிடம் தொடர்பாகவே பேசினார்கள்.

மேலும், நாட்டை இரண்டாகப் பிரிக்காமல் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் எம்முடன பேசினார்கள்.

அத்துடன், அங்கு கலந்து கொண்டவர்கள் ஆயுதத்திற்குப் பதிலாக சங்கீத உபகரணங்களையே கையில் ஏந்தினார்கள். அவர்களுடைய செயற்பாடுகளும் சிறப்பாக அமைந்திருந்தன. ஜே.வி.பியினரின் 'விமுக்தி கீ' என்ற நிகழ்ச்சிக்குப் புறம்பாகவே இது அமைந்திருந்தன.

அதுமட்டுமன்றி பொங்கு தமிழ் நிகழ்விற்கு முன்னர் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாதுகாப்புப் படையினரிற்கும் இடையில் முறுகல் நிலையொன்றும் ஏற்பட்டது.

இதனையடுத்து, மேற்படி விழாவிற்கு சமுகமளித்த மக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பு முகாமுக்கு ஆவேசத்துடன் பிரவேசித்து கோஷம் எழுப்புவார்கள் என்றே படையினர் எண்ணியிருந்தனர். ஆனால் விழாவில் கலந்துகொண்ட பொதுமக்கள் அப்படியொன்றும் செய்யவில்லை.

இதனால் 'பொங்கு தமிழ் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பல சிங்கள மாணவர்களும் கலந்துகொண்டனர் என்றுள்ளது. (உ-10)


## நல்லூர் பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

**21.07.2003ம் திகதி முதல் 31.12.2003ம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றது**

| | திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | கொக்குவில் சந்தை (குளப்பிட்டி சந்தி) | கோண்டாவில் 4ம்கட்டை வீதியோர மீன்வியாபாரம். |
|---|---|---|---|
| 1. கேள்விப்பத்திர கட்டணம் (வற்வரி உட்பட) | 600.00 | 600.00 | 300.00 |
| 2. கேள்விப் பிணைப் பணம் | 3000.00 | 3000.00 | 1000.00 |
| 3. ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை. | 140850.00 | 75150.00 | 5000.00 |

4. கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதி திகதி 16.07.2003 புதன்கிழமை (12.00மணி மதியம்வரை)
5. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 17.07.2003 வியாழக்கிழமை (12.00மணி மதியம்வரை)
6. கேள்வி திறக்கும் திகதி 17.07.2003 மாலை 3.00மணிக்கு

**குறிப்பு:-** சித்திபெறும் கேள்விக்காரர்கள் ஏற்றுக்கொண்ட தொகை முழுவதையும் உடன் செலுத்தல் வேண்டும். கோரப்பட்ட தொகையுடன் 20% வற்வரியும் மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமைச் செயலகத்திலும், உப - அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

*செல்லையா செல்வரத்தினம்*
*செயலாளர்,*
*பிரதேசசபை, நல்லூர்.*

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி. 03.07.2003* (C/6377)


## ஜனாதிபதியின் போலி கடிதப் பிரதிகளுடன் கனடா செல்ல முயன்றவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் கடிதப் பிரதிகளை போலியான முறையில் தயாரித்து கனடாவிற்கு கொண்டு செல்ல முற்பட்ட நபர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி நபரை நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இவர் ஜனாதிபதியின் கடிதப்பிரதிகளைக் கொண்டு கனடா செல்ல முற்பட்ட காரணம் குறித்து பொலிஸார் தற்போது தீவிர முயற்சியிலீடுபட்டுள்ளனர். (உ-10)

## சிறு விளம்பரம்


### மணமகன் தேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் படித்த மணமகள்களுக்கு A/L படித்த அல்லது பட்டதாரி மணமகன்கள் உடன் தேவை. ஜாதகம், போட்டோ உட்பட உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி நா.கந்தையா, சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை. (7205)


### சைவசமயபாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கு சைவசமய பாடம் கற்பிக்கப்படும் ஆசிரியர்களுக்கான சைவசமய பாடக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றவிருக்கும் ஆசிரியர்களை சமய பாடநூல்களை எடுத்து வருமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# வடக்கு — கிழக்கு அபிவிருத்திப்பணிகளை அரசு மேற்கொள்வதை புலிகள்விரும்பவில்லை

## ஜப்பானியத் தூதுவர் பிரதமரிடம் விபரிப்பு

(கொழும்பு)

வடக்க-கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப்பணிகள் யாவும் இடைக்கால நிர்வாகசபையின் ஊடாகவே இடம்பெறவேண்டுமென தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கின்றனர் என ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகா பிர்தமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த திங்களன்று சந்தித்த பின்னர் அச்சந்திப்பில் உரையாடப்பட்ட விடயங்கள்பற்றி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த செவ்வாயன்று ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகா விரிவாக விளக்கிக்கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் மேலும் தகவல் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் அதேவேளை வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை அமைக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

அரசாங்கத்தின் ஊடாக வடகிழக்கில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படுவதை புலிகள் விரும்பவில்லை. அபிவிருத்திப் பணிகள் தொடர்பான அரசின் திட்டத்திலும் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை.

எனவே, இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயத்தில் அரசு விரைவில் பரிசீலனை செய்யவேண்டும் என பிரதமரிடம் ஜப்பானியத் தூதுவர் அழுத்திக்கூறியுள்ளதாகவும் அத்தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

# போராளி சத்தியராஜ் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதுநகர் அரசியல் பொறுப்பாளர் சத்தியராஜை (தேவராசா சுபாஸ்கரன்) எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி அப்துல் கபூர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 6ஆம் திகதி மட்டக்களப்பு புதுநகர் பகுதியில் வைத்து தேசிய துணைப் படைவீரர் கதிர்காமத்தம்பி நவசூரியம் என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதையடுத்து, அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்த சத்தியராஜ் கடந்த 8ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதேவேளை, போராளி சத்தியராஜை பிணையில் விடுவிக்கக் கோரி திருகோணமலை மேல்நீதிமன்றத்தில் கடந்த மாதம் 20ஆம் திகதி செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது. (உ-8)

# மட்டு-அம்பாறை மாவட்ட புலிகளின் பிரமுகர்களுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கு மிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இரவு கொக்கட்டிச் சோலையில் உள்ள சோலையகத்தில் இடம்பெற்றது.

இதில் கூட்டமைப்பு எம்.பிக்களான யோசப் பரராஜசிங்கம், தங்கவடிவேல், கிருஷ்ணபிள்ளை, அரியநாயகம் நேரு ஆகியோரும் புலிகள் தரப்பில் மட்டு-அம்பாறை பிராந்தியப் பிரதித் தளபதி ராம், அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், துணைப்பொறுப்பாளர் கிருஷான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், கல்வி மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், கல்லடி இராணுவ முகாம் விஸ்தரிப்புக் குறித்து பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் பிரஸ்தாபிப்பது எனவும் இதுவிடயத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரைச் சந்தித்து அழுத்தம் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

# சுனில் தாப்ரூ கொலை பற்றிய க.கா.குழுவின் விசாரணை முடிவுகள் விரைவில் வெளிவரும்

(கொழும்பு)

தெஹிவளை பொலிஸ் நிலைய புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரி சுனில் தாப்ரூவின் கொலை தொடர்பான கண்காணிப்புக் குழுவின் விசாரணைகள் முடிவுற்றதும் அது தொடர்பான முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எக்னஸ் பிரகாடொட்டி தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தாம் தொடர்ந்து பொலிஸார் உட்பட பலரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுவருவதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எக்னஸ் பிரகாடொட்டி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஸ்.கிருபாகரனிடம் இதுவரை விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-10)

# உயர் பாதுகாப்பு வலயமான தனங்கிளப்பில் பயிர்ச்செய்கைக்கு படைத்தரப்பு அனுமதிக்கும்

(கொழும்பு)

தென்மராட்சி தனங்கிளப்புப் பகுதியிலுள்ள விளை நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் விளை நிலங்களை அந்தந்த விவசாயிகளிடமே ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். குடாநாட்டு சிவில் நிர்வாக அதிகாரி கேணல் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

மேலும் தனங்கிளப்பு உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பகுதியாதலால் படையினரை அங்கிருந்து உடனடியாக வெளியேற்ற முடியாமல் உள்ளது. ஆயினும், அந்நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடியவாறு இப்பகுதி விவசாயிகளுக்கென பாஸ் நடைமுறையொன்றை ஏற்படுத்தும் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தனங்கிளப்பு விவசாயிகள் சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அத்துடன், யாழ். குடாவின் கட்டளையிடும் தளபதி சரத் பொன்சேகாவின் கவனத்திற்கு இவ் ஆலோசனை கொண்டு வரப்பட்டுள்ளது.

இவை ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் தனங்கிளப்பு பகுதியில் பயிர்ச்செய்கைகள் ஆரம்பமாகும்.

குடாநாட்டில் படையினர் வசமிருந்த 26 வீடுகள் இதுவரை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் 32 வீடுகள் விரைவில் ஒப்படைக்கப்படும் என கேணல் ரத்நாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட சமூகக்கல்விப் போட்டி முடிவுகள்

(அளவெட்டி)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற சமூகக் கல்விப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முடிவுகள் வருமாறு,

**தரம் 6,7 - வகை 4**

*1ம் இடம* - எஸ்.பிரதர்சனா - யா/யூனியன் கல்லூரி
*2ம் இடம* - க.கவீர்த்தனா - யா/யூனியன் கல்லூரி
*3ம் இடம* - பி.புவிதரன் - யா/மகாஜனாக் கல்லூரி
*4ம் இடம* - இ.சிறிவாணி - யா/மகாஜனாக் கல்லூரி
*5ம் இடம* - க.கோகுலன் - யா/மகாஜனாக் கல்லூரி

**வகை 3**

*1ம் இடம* - செ.பொபிதா - மல்லாகம் ம.வி
*2ம் இடம* - க.கிரிசாந்தன் - அருணோதயாக் கல்லூரி
*3ம் இடம* - கு.பானுஜன் - மல்லாகம் ம.வி
*4ம் இடம* - க.வினோபா - மல்லாகம் ம.வி
*5ம் இடம* - சி.ஜீவதாஸ் - அருணோதயாக் கல்லூரி

**வகை 2**

*1ம் இடம* - செ.கஜேந்தினி - இளவாலை மெய்கண்டான்
*2ம் இடம* - ம.கார்த்தாயினி - இளவாலை மெய்கண்டான்
*3ம் இடம* - ச.கிளியோபாட்ரா - குட்டியப்புலம் அ.த.க.
கு.சத்தியலினோ - குட்டியப்புலம் அ.த.க.
*5ம் இடம*- சௌ.தர்மிலன் - குட்டியப்புலம் அ.த.க

**வகை 1**

*1ம் இடம* - ச.பிரதாப் - தெல்லிப்பழை சைவப்பிரகாசம்
*2ம் இடம* - தே.பிரதீப் ராஜ்குமார் - மயிலிட்டி றோ.க.த.க
*3ம் இடம* - ஆ.ஜெறோடேமிராஜ் - மயிலிட்டி றோ.க.த.க
*4ம் இடம* - ஜெ.அலிஸ்ரன் - நடேஸ்வராக் கல்லூரி
*5ம் இடம* - செ.நிரஞ்சனா - அளவெட்டி சதானந்தா

**தரம் 8,9 -வகை 4**

*1ம் இடம* - ம.மகிலன் - யூனியன் கல்லூரி
*2ம் இடம* - சி.கேசலா - யூனியன் கல்லூரி
*3ம் இடம* - ஜெ.கோபிகா - வசாவிளான் ம.ம.வி
*4ம் இடம* - பா.லோகதுர்க்காயினி - யூனியன் கல்லூரி
*5ம் இடம* - க.திருமகள் - மகாஜனாக் கல்லூரி

**தரம் 10,11 - வகை 1**

*1ம் இடம* - இ.ராஜ்பாரதி - கீரிமலை நகுலேஸ்வரா
*2ம் இடம* - தே.ரஜிதா - கீரிமலை நகுலேஸ்வரா
*3ம் இடம* - ஆ.றோகினி - மயிலிட்டி றோ.க.த.க
ம.முரளிதரன் - கீரிமலை நகுலேஸ்வரா
*5ம் இடம* - த.சிந்துஜா - மயிலிட்டி றோ.க.த.க
ஸ்ரீ.விதுஜன் - கட்டுவன்புலம் ம.வி
து.காளிதாஸ் - நடேஸ்வராக் கல்லூரி

**தரம் 12, 13 - வகை 4**

*1ம் இடம* - ப.துஷ்யந்தன் - மகாஜனாக் கல்லூரி
*2ம் இடம* - அ.ருஷாந்தி - யூனியன் கல்லூரி
*3ம் இடம* - செ.பிரசன்னா - வசாவிளான் ம.ம.வி
*4ம் இடம* - தி.காயத்திரி - மகாஜனாக் கல்லூரி
*5ம் இடம* - டாஜானா - வசாவிளான் ம.ம.வி

**வகை 3**

*1ம் இடம* - கு.திஜானா - மல்லாகம் ம.வி
*2ம் இடம* - செ.புளோரன்டீபா - மல்லாகம் ம.வி
*3ம் இடம* - த.கிமால் - மல்லாகம் ம.வி

**வகை 2**

*1ம் இடம* - மா.கயல்விழி - இளவாலை மெய்கண்டான்
*2ம் இடம* - செ.அலோயன் - இளவாலை மெய்கண்டான்
*3ம் இடம* - ஜெ.அடயூபன் - இளவாலை மெய்கண்டான்.

(உ-83)


## தரம் 11 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு

**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப்போட்டி இல-6

மாணவர் பெயர்: ..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................
ஆசிரியர்.

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப்படும்
-குறள்

வலம்புரி

## சரத்பொன்சேகாவின் விடாப்பிடி

உயர்பாதுகாப்பு வலயங்களைப் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரவுள்ளதாக யாழ். குடாநாட்டுத் தளபதி காமினி பொன்சேகா தெரிவித்துள்ளாா. உயர்பாதுகாப்பு வலயம் குறித்து மனிதஉரிமை ஆணைக்குழு தெரிவித்த ஆட்சேபனைக்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் கருத்தில், உயர்பாதுகாப்பு வலயத்தில் பாதுகாப்புப்படையினரின், பாதுகாப்புக் குறித்தே நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

பொதுமக்களை அங்கு மீளக் குடியமர்த்துவதில் நாம் அக்கறை காட்டப் போவதில்லை எனக்கூறியுள்ளார். மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் கருத்து சமாதான முயற்சிக்குப் பெரும் குந்தகமாக அமைவதுடன் குடா நாடடின் படைத்தளபதி ஒருவர் பொது மக்களின் நலன் பற்றிச் சிறிதும் சிந்தியாது உயர்பாதுகாப்பு வலயத்தில் பாதுகாப்பு படையினரின் பாதுகாப்புக் குறித்து மட்டுமே அக்கறை எடுக்க முடியும் எனக்கூறியிருப்பது, இனவாதம் பற்றிய சிந்தனை அவரிடம் மேலோங்கியிருப்பது புலனாகிறது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துமாறு விடுதலைப்புலிகள் முன்வைத்த கோரிக்கைக்கு, அரசு சம்மதம் தெரிவித்த போதிலும் யாழ்.குடாநாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவே அதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்ற கருத்து தமிழ் மக்களிடையே ஆழமாகப் பதிந்துள்ளது.

எமது தாயகத்தில்-எமது குடியிருப்பில்-எமது பரம்பரை ஓடி விளையாடிய மண்ணில் நாம் குடியிருப்பதற்கு அனுமதியில்லையெனில் எமக்கு இந்த நாட்டில் என்ன உரிமை உண்டென்பது தமிழ் மக்களின் நியாய பூர்வமான கேள்வி.

உயர்பாதுகாப்பு வலயத்தில் தமிழ் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பதாயின் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டும் என்பது சரத்பொன்சேகாவின் கருத்து. ஆனால் எந்தவொரு தீவிரவாத அமைபபும் சமாதானத் தீர்வுக்கு முன்னர் ஆயுதங்களைக் கைவிட்டதாக வரலாறு இல்லையென அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார். இந்நிலையில் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலே உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்த முடியும் என்ற படைத்தளபதியின் கருத்து எவ்வகையிலும் பொருத்தமுடையதல்ல.

அதேவேளை, உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்தும் முடிபை இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரிடம் கையளித்த பெருமையும் சரத்பொன்சேகாவையே சாரும் என்பதும் இங்கு நினைவு [illegible] த்தக்கது.

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டோர் முழுநாள் பயிற்சிப் பட்டறை

## இன்று கோப்பாய் பாடசாலையில்

(நாவற்குழி)

யாழ்மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஏற்பாட்டில் மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று மு.ப 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜெனிவாவில் நடைபெற்ற மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச வலைப்பின்னல் மாநாட்டில் பங்கு பற்றிய சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தரும் மிதிவெடியால் பாதிக்கப்பட்டவருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கமலா சிவசிதம்பரம் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

அதேவேளை மிதிவெடியால் பாதிக்கப்பட்டோரை ஒன்றிணைத்து அவர்களின் தேவைகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவதை நோக்கமாக கொண்ட இம்முழுநாள் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் அன்றைய நாள் வருமானத்தை ஈடு செய்யக் கூடிய வகையில் தலா 500 ரூபா பணமும் மதிய போசனமும் வழங்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-57)

## நோயாளர் பராமரிப்பில் படையினர் பாதுகாப்பு பணியில் பொலிஸார்

(கொழும்பு)

வைத்தியசாலை சிற்றூழியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட வைத்தியசாலைக் கடமைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தவும் பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸாரை ஈடுபடுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சிற்றூழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை கையாள்வதற்கு அமைச்சர் கருஜெயசூரிய தலைமையில் அமைக்கப்பட்ட உபகுழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிசசை பெற்றுவரும் நோயாளிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளில் அவர்களின் உறவினர்களை சேவை அடிப்படையில் பணிபுரிய வருமாறு சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண கோரிக்கை விடுத்துள்ளார்.

சிற்றூழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தை கையாள்வதற்கு அமைச்சர் கருஜெயசூரிய தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உப குழுவில் அமைச்சர்களான ராஜித சேனாரட்ண, பி.தயாரட்ண, காமினி லொக்குகே, திலக்மாரப்பன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(தி)

## நீர்கொழும்பு அணி வெற்றி வாகை

(யாழ்ப்பாணம்)

2003,2004 ஆண்டுக்கான முதன்மை லீக் காலபந்தாட்டப் போட்டிகளின முக்கிய போட்டியொன்றில் நீர்கொழும்பு யுத் அணி வெற்றிபெற்றுள்ளது.

நடப்பு எவ்.ஏ. கிண்ண சம்பியனான றிநோன் கழகத்திற்கும் முதன்மை லீக் சம்பியன் நீர்கொழும்பு யுத் அணிக்குமிடையில் நேற்று முன்தினம் நாரஹேன்பிட்டி சாலிக மைதானத்தில் நடை பெற்ற போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் நீர் கொழும்பு யுத் அணி வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் முதல் பகுதியில் ஒரு கோல் போட்ட நீர்கொழும்பு யுத் அணியும் றிநோன் கழகமும் பலமாக முயன்றும் கோல்கள் எதுவும் போட முடியவில்லை. பின்னரைப்பகுதியில் மீண்டும் ஒரு கோலை நீர்கொழும்பு யுத் அணி போட்டதுடன் றிநோன் கழகமும் ஒரு கோலைப் போட்டது. ஆட்ட முடிவில் 2:1 என்ற கோல்கணக்கில் நீர்கொழும்பு யுத் அணி வெற்றி பெற்றது.

(உ-68)

## சிறுவர்களைக் கையாளுதல் கருத்தரங்கு 3 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 9,12,21 ஆம் திகதிகளில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர்களைக் கையாளுதல் தொடர்பான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலுமே இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி புதன் கிழமை மு.ப 9.00 மணிமுதல்பி.ப 4.00 மணிவரை யாழ்.குடாநாட்டிலுள்ள சிறுவர் இல்லஊழியர்கள் மற்றும் பாதுகாவலர்களும்,

எதிர்வரும் 12 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு சிறுவர் இல்லங்களில் அதிகாரம் கொண்ட தலைவர்களுக்கும்

21 ஆம் திகதி மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், நிர்வாகிகள் ஆகியோருக்கும் இக் கருத்தரங்குகள் நடத்தப்பட வுள்ளன.

வைத்திய அதிகாரிகள், சட்டத்தரணிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மனிதஉரிமைகள் தொடர்பான பயிற்றுவிப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-4)

## பலாலி விமான நிலையத்தில் பயணிகள் நலன் கருதி புதிய இருவாயில் மண்டபம்

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தில் இரு நுழைவாயில்களைக் கொண்ட புதிய மண்டபம் ஒன்று தற்போது அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்விமான நிலையத்தில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை கருத்தில் கொண்டே இம்மண்டபம் அமைக்கப்பட்டு வருவதாக சிவில் விமான போக்குவரத்து சேவையாளர் பணிப்பாளர் நாயகம் எச.எம்.ரி. நிமல்ஸ்ரீ தெரிவிததுள்ளாா.

மேலும் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் புதிய ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

தற்போது சிங்கள மகாவித்தியாலயக் கட்டடத்திலேயே பயணிகளின் பொருட்கள் சோதனையிடப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தி)

## புகைப்பிடித்தலை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்கள் அமுல்

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

புகைப்பிடித்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதற்கிணங்க அமைச்சரவை அனுமதியுடன் சட்ட வாக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் பி.தயாரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் புகைப்பிடித்தலை முற்றாகக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கைக்கு இலங்கை உள்ளிட்ட 41 நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் இலங்கையை புகைப்பிடிப்போர் அற்ற நாடாக மாற்ற இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் மேலும் குறிப்பிட்ட அமைச்சர் பி.தயாரத்ன,

இலங்கையில் 33 சத வீதமானோர் புகைப்பிடிக்கின்றனர். சுமார் ஒரு வீதத்திற்கும் குறைவான பெண்கள் இங்கு புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளனர்.

மேலும் தோட்டப் பகுதிகளில் 64.4 வீதமான ஆண்களும் நகர்ப்புறங்களில் 85 சதவீதமான ஆண்களும் நகர்ப்புறச் சேரிகளில் 85 சதவீதமான ஆண்களும் புகைப்பிடித்தலுக்கு அடிமையாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## வட்டி வீதம் குறைப்பு

(கொழும்பு)

சிறிய கைத்தொழில் முயற்சிக் கடன்களுக்கான வட்டி வீதம் 9.5 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடனேயே இவ்வட்டி வீதக்குறைப்பு இடம் பெற்றுள்ளது. (தி)

## வலிகாமம் கல்வி வலயத்தில் ஆங்கிலப்பாடம் போதிக்க 179 பேருக்கு தேவைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்கல்வி வலயப்பாடசாலைகளில் ஆங்கிலப்பாட ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில் இந்த வலயத்தில் 179 ஆங்கில ஆசிரியர்களுக்கு தேவைப்பாடு இருப்பதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்தார்.

இதேவேளை ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையால் தமது பிள்ளைகளின் ஆங்கிலப் பாட அறிவு மட்டம் வீழ்ச்சியடைந்து செல்வதாக பெறறோர் தரப்பில் கவலை தெரிவக்கப்படுகிறது.

இது இவ்விதமிருக்க ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று அண்மையில் வெளியேறிய 138 வலிகாமம் வலயப் பாடசாலை ஆசிரியர்களில் 9 பேர் மட்டுமே ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ )

## திைசரி தியானம்

### உன்னத நிலை

உடல் மனத்துடன் நெருங்கிய தொடர்புடையது. வேறு மாதிரி சொல்வதானால் சக்தியற்ற நோய் வாய்ப்பட்ட உடல் என்றால் மனமும் அப்படித்தான் இருக்கும். ஆகவே நீங்கள் ஹடயோகம் செய்வதன் மூலம் உங்கள் உடலை பலமிக்கதாகவும் நோயற்றதாகவும் வைத்துக்கொள்ள வேண்டும. அதன் மூலம் வாழ்க்கையின் மறுகரையான சாந்தியும் வளமும் கொண்ட உன்னத நிலையை அடையலாம்.

சுவாமி சிவானந்தர்

## போக்குவரத்துக்கு இடையுறாக பொருட்களை விற்பனை செய்வோரின் வியாபார உரிமம் இரத்தாகும்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும் விதத்தில் வீதியோரத்தில் பொருட்களை வைத்து விற்பனை செய்யும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் அனைத்திற்கும் நல்லூர் பிரதேச சபைச் செயலாளரினால் கையொப்பமிட்டு எச்சரிக்கைக் கடிதங்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கடிதங்களின் பிரதிகள் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வ.பி.போ.ச கோண்டாவில் டிப்போ முகாமையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அக்கடித்தில்;

பல தடவைகள் வீதியில் பொருட்கள், எண்ணெய்பரல்கள், விளம்பரப்பலகைகள் என்பவற்றை வைக்க வேண்டாமென தெரிவித்தும் தாங்கள் தொடர்ந்தும் வீதியோரமாக பொருட்களை வைத்து வியாபாரம் செய்து போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பது குற்றமான செயலாகும்.

எனவே, இக்கடிதம் கிடைத்து மூன்று நாட்களுக்குள் வீதியில் வைத்து வியாபாரம் செய்யும் சகல பொருட்களையும் அப்புறப்படுத்தி வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றேன்.

தவறின் சபையினால் வீதியோரங்களில் வைக்கப்பட்ட பொருட்கள் அள்ளப்பட்டு தங்கள் வியாபார உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது. (உ)

# ஜனாதிபதியின் அதிகாரங்களை அரசினால் குறைக்க முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று பாதுகாப்பு அதிகாரங்களை குறைக்கும் நோக்கில் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் ஒருபோதும் பயனளிக்கப் போவதில்லை என எதிர்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி அரசின் இந்த யோசனை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தரா ஜபக்ஷ மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைக்கும் எண்ணத்துடன் முன்னர் கொண்டுவரப்பட்ட 19வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டமூலத்தைப் போன்றே உத்தேச அதி உயர் பாதுகாப்புக் கட்டுப்பாட்டு சட்டமூலமும் நிராகரிக்கப்படும் நிலைமை ஏற்படும்.

இந்நிலையில் பிரச்சினைகள் எதுவானாலும் அவற்றிற்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கம் ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு அடிப்படையில் சகவாழ்வு அரசியலை முன்னெடுத்துச் செல்வதே மிகவும் பொருத்தமானதாக அமையும். வடக்குக் கிழக்கு போன்றே தெற்கிலும் பாதுகாப்பு நிலைமை நாளுக்கு நாள் படுமோசமடைந்து வருகிறது இது குறித்து அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உத்தேச அதி உயர் பாதுகாப்பு கட்டுப்பாட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக அரசு முயற்சி எடுத்துவருகின்ற போதிலும் அதனைச் சட்டரீதியாக மேற்கொள்ள முடியாது என்று அரசியல் யாப்பு நிபுணர்கள் கருதுவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(ம)

## கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு

# நெடுந்தீவில் நேற்று விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவுதினத்தை முன்னிட்டு நெடுந்தீவு விளையாட்டுக்கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் என். சிவாஜிலிங்கம், யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் பொதுச் செயலாளர் என்.கனகலிங்கம் ஆகியோர் இப்போட்டிகளை ஆரம்பித்துவைத்தனர்.

நிகழ்வின் பொதுச் சுடரை மாவீரர் கட்டப்பொம்மனின் தந்தையார் மரியாம்பிள்ளை ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கரும்புலிகளின் நினைவுப் படத்திற்கு நினைவுச் சுடரினை கரும்புலி பூங்கோதையின் சகோதரி, மற்றும் யாழ்மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுலன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின.

குதிரைச்சவாரிப் போட்டி, ஆண், பெண்களுக்கான கயிறுழுத்தல் போட்டி, 45 வயதிற்கு மேற்பட்டோருக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி எனப் பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன.

இறுதியாக நெடுந்தீவு உதைபந்தாட்ட அணிக்கும் வன்னி உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் வன்னி உதைபந்தாட்ட அணி வென்றது. அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.கணேசலிங்கம் தலைமையில் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் அரசியல் பிரமுகர்கள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

(ந-5)

## கையடக்கத் தொலைபேசி கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று அதிகாலை சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட 126 கையடக்கத் தொலைபேசிகள் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 30 இலட்சம் ரூபாவாகும். ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சிகரட் பைக்கற்றுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

(த)

## போர் முகம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

போராளி மருத்துவர் தூயவனின் ''இன்னுமொரு போர் முகம்'' நூல் வெளியீட்டு விழா நாளை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதான அரங்கில் கரும்புலிகள்நாள் நிகழ்வின்போது வெளியீடு செய்யப்படவுள்ளது.

(ந-5)

## நூலகவியல் கற்கை நெறி

(கொழும்புத்துறை)

யாழ்.பல்கலைக்கழக புறநிலை படிப்புகள் அலகின் நூலகவியல் தொகுதி 1 அடிப்படைக் கற்கை நெறி நாளை சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு ஓ.எல்.பி.மண்டபத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறும் இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை கலந்து கொள்ளுமாறு புறநிலைப் படிப்புகளின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கேட்டுள்ளார்.

(த-51)

## காதல் வேலி அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை,இலக்கியப் பேரவை வெளியிடவுள்ள தில்லைச்சிவனின் ''காதல்வேலி'' நூல் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் இரா.சிவச் சந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சட்டத்தரணி சோ.தேவராஜா,கலாநிதி சொக்கன், கலாநிதி சிவலிங்கராஜா,பேராசிரியர் அ.சண்முகதாஸ்,விரிவுரையாளர் சி.குமரன்,.எழுத்தாளர் சட்டநாதன்,கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் நூல் நயப்புரையினை ஆற்றவுள்ளனர். இந்நூலின் முதல் பிரதியை பிரபல வர்த்தகர் கு.கங்கை வேணியன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

(ந-5)


**கணிதவகுப்புக்கள்**

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் கணித வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு;

**ஜெ.கோகுலவாசன்**

99, அரசடி வீதி,
(யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம் (C/6378)



**ஆட்கள் தேவை**

**கணனி பக்க வடிவமைப்பாளர்கள்**
(ஆண்கள், பெண்கள்)

**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**
(சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள்)

04.07.2003 இன்று வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3.30மணிக்கு நேரில் வரவும்.

-ஆளணி முகாமையாளர்.

-வலம்புரி-
இல.15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்


**கடற்படையின்..**

ஏற்றிச் சென்ற கடற்படையினர் அவர்களைக் கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்பவம் இடம் பெற்ற பகுதியில் தொழிலில் ஈடுபட்ட ஏனைய மீனவர்களையும் துப்பாகியைக் காட்டி மிரட்டியுள்ளனர். இத்தாக்குதலின் போது காயமடைந்த மூன்று மீனவர்களும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இத்தாக்குதலின் போது சேதமடைந்த படகின் உரிமையாளரான த.விஸ்ணு தாஸ் உட்பட சில மீனவர்கள் தாம் தாக்கப்பட்டமை மற்றும் கடற் படையினரால் மிரட்டப்பட்டமை தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கடற்படையினர் தெரிவிக்கையில் தொண்டமானாறு கடற்பரப்பினுள் கடற்றொழிலில் ஈடுபட்ட சில படகுகளை தாம் கரைக்குச் செல்லுமாறு பணித்ததாகத் தெரிவித்துள்ளனர்.

(ந-43,5)

# கொழும்பில் தேடுதல் 34 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பில் படையினரும் பொலிசாரும் இணைந்து நேற்று நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல்களில் 34 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு நகரை அண்டியுள்ள பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட இந்த தேடுதல்களில் கைது செய்யப்பட்ட அனைவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

நேற்றையதினம் மட்டும் 106 இடங்களில் படையினரும் பொலிசாரும் இவ்வாறு திடீர் தேடுதல்களை மேற்கொண்டதாக தெரியவருகிறது. இத்தேடுதல் வேட்டையில் 14 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பு முகத்துவாரப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பொலிஸார் மேற்கொள்ளவிருநத தேடுதல் நடவடிக்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் தலையீட்டினால் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த)

## ஐ.தே.கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று ஆரம்பமாகி இரண்டு தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எம்பிலிப்பிட்டியாவில் நடைபெறும இக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கலந்து கொண்டு உரையாற்றுவார்.

கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(தி)

## திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக் குளம் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து பெறுமதிமிக்க நகைகள் 15ஆயிரம் ரூபா பணம் மற்றும் உடுபுடைவைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

நள்ளிரவு வேளையில் வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்த சமயம் ஓடு பிரித்து இறங்கி திருடர்கள் பொருட்களைத் திருடிச் சென றுள்ளனர்.

இது குறித்துப் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ந-51)

**மட்டு...**

மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அலுவலகப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதனால், அப்பகுதியில் சிலமணி நேரம் பதற்றம் நிலவியது.

இசசம்பவத்தையடுத்து ஈ.பி.டி.பி மாவட்ட அலுவலகத்திற்கு அருகில் உள்ள சர்வோதய அலுவலகத்திற்கு வந்த இரு இளம் குடும்பஸ்தர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(தி)

**ஆயுதக்...**

விசாரணைகளில் இறங்கியுள்ளனர்.

சாளியபுரம் கஜபாகுப் பிரிவின் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சியில் தீ அணைக்கும் படைப்பிரிவினர் கடும் முயற்சியில் ஈடுபட்டுவரும் அதேவேளை, ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்டுள்ள தீச்சுவாலைக்குள் வெடிச்சத்தங்கள் கேட்ட வண்ணம் இருப்பதாகவும் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத்கருணாரத்னா தெரிவித்துள்ளார்.

இது இவவாறிருக்க தீ விபத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள், பலியானோர், காயப்பட்டோர் பற்றிய விபரங்கள் இச்செய்தி எழுதும் வரை தெரியவரவில்லை.

(ம)

## மாம்பழம் சந்தியில் புதிய முகாம்

(கொழும்புத்துறை)

அரியாலை மாம்பழம் சந்தியில் இராணுவத்தினர். புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.


ஏற்கனவே இந்த இடத்தில் இருந்த படை முகாம் சில மாதங்களுக்கு முன்னர் அகற்றப்பட்டு இருந்தது.ஆனால் தற்போது மீண்டும் அதே இடத்தில் படை முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை அரியாலைப் பகுதியில் பொலிஸ்நிலையம் ஒன்று அமைப்பதற்கான ஏற்பாடுகளும் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-51)

## 10ஆம்ஆண்டு நினைவஞ்சலி 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07.02.1919
விண்ணில் 04.07.1993



மண்ணில் 27.03.1927
விண்ணில் 30.03.1995

அமரர்
**பெரியதம்பி சுப்பிரமணியம்**
(V.P.S நல்லெண்ணை உரிமையாளர்)
திதி: அபரபக்க பிரதமை

அமரர்
**திருமதி நாகம்மா சுப்பிரமணியம்**
திதி: அமாவாசை

அன்பினால் எம்மைப் பேணி வளர்த்து
சுமைகள் துயர்கள் வந்தபோதிலும்
அவனியிலே நிறைவுடன்
வாழவைத்த எமது அன்புத் தெய்வங்களை
எத்தனை ஆண்டுகள் சென்றபோதிலும்
நாம் மறவோம்

என்றும் உங்கள் நினைவுடன்ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்,சகோதரர்,மைத்துனர்கள்,
மைத்துனிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(C/6379)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.